பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 12 ஞாயிற்றுக்கிழமை (29.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 333

# ஏ-9 பாதையை திறக்க இணங்காவிடில் அடுத்த பேச்சுக்கு புலிகள் சம்மதிக்கார்

## அந்த விவகாரம் பேச்சுக்கு அப்பாற்பட்டது என்று அரசு அடித்துச் சொல்கிறது

சிறப்புச் செய்தி

- ஜெனிவீாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனிவா, ஒக்ரோபர்.29

★ அரசாங்கம் மூடி வைத்துள்ள ஏ-9 பாதையைத் திறக்கவேண்டும். அதற்கு இப்போதைய பேச்சுக்களில் இணக்கம் தெரிவிக்கவேண்டும்.

- அவ்வாறில்லையெனின் அடுத்த கட்ட பேச்சுக்கு திகதி நிர்ணயிக்க விடுதலைப் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்.

★ ஏ-9 பாதையைத் திறப்பது என்ற கேள்விக்கே இடமில்லை; அது பேச்சுக்கு அப்பாற்பட்டது குடாநாட்டு மக்களுக்குத் தேவையான சகல பொருள்களும் கப்பல் மூலம் அனுப்பப்படும் அதற்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைக்க வேண்டும்.

ஏ-9 பாதையை திறப்பது சம்பந்தமான விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், அரசாங்கத்தின் நிலைப்பாடும் இவையே என்று மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

நேற்று இங்குள்ள வரம்பே மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஜெனீவா -2 பேச்சுவார்த்தையில் ஏ-9 பாதை விவகாரம் ஆராயப்பட்ட வேளையில் இரண்டு தரப்புகளும் தத்தமது நிலைப்பாடுகளை வெளியிட்டன என்று அறியவந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுத் திட்டத்தை அரசிடம் கேட்கிறார்கள் புலிகள்

- ஜெனிவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனிவா, ஒக்.29

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான யோசனையை - தீர்வுத் திட்டத்தை - முன்வைக்குமாறு விடுதலைப் புலிகள் அரசிடம் கேட்டுள்ளனர்.

உடனடியாகத் தீர்வுத்திட்டத்தை முன் வைக்கமுடியாது அடுத்த கட்டப்பேச்சுக்களில் தீர்வைப்பற்றி ஆராயலாம் என அரசுத் தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான பேச்சுக்களின் போது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களின் அவலங்களைத் தீர்க்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

அரசியல்தீர்வு - இறுதித்தீர்வு - தொடர்பாகவும் பேசவேண்டும் என்ற யோசனையை அரசுத்தரப்பு முன்வைத்துள்ளது.

இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தீர்வுத்திட்டம் என்ன? அதை முன்வையுங்கள் என்று கேட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய பேச்சுக்களில் புலிகள் - நோர்வே - அரசு தரப்புப் பிரதிநிதிகள்....

## ஏற்கனவே இணங்கியவற்றை அமுல்படுத்த தவறியதே மோசமான நிலைக்கு காரணம்

### பேச்சை ஆரம்பித்து வைத்து சொல்ஹெய்ம் உரை

ஜெனிவா, ஒக்.29

கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுகளில் இணக்கம் கண்ட - தங்களுக்குள் இணங்கிக்கொண்ட - விடயங்களை நடைமுறைப்படுத்த தரப்புகள் தவறியமையே இலங்கையின் இன்றைய மோசமான நிலைவரத்துக்குக் காரணமாகும்.

ஜெனிவா - 2 பேச்சுகளை நேற்று ஆரம்பித்துவைத்து விசேட உரையாற்றிய நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெனிவாவில் அரசும் - புலிகளும் ஏற்கனவே இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தத் தவறியமை குறித்து தனது கவலையையும், விசனத்தையும் வெளிப்படுத்தி உரையாற்றிய சொல்ஹெய்ம், தற்போது நடைபெறும் ஜெனிவா - 2 பேச்சுகளின் பெறுபேறுகளாக மூன்று முக்கிய விடயங்களை சர்வதேச சமூகம் எதிர்பார்த்துள்ளது என்றும் தெரிவித்தார்.

பெப்ரவரியில் ஜெனிவாவில் உடன்பட்ட விடயங்களை தரப்புகள் உரிய வழிமுறையில் நடைமுறைப்படுத்த தவறியதன் காரணமாகவே இலங்கையில் வன்செயல்கள் பரவி, மனித உரிமைகள் பெரும் அளவில் மீறப்படுகின்ற நிலைமை உருவாகியது என்றும் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டினார்.

ஜெனிவா வந்திருக்கும் அரசுப் பிரதிநிதிகள் குழுவுக்கும் விடுதலைப் புலிகளின் குழுவினருக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் நேற்று சுவிஸ் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பமாகின.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் ஐரோப்பிய ஆணையகத் தலைமையகங்களுக்கு அருகே அமைந்திருக்கும் ஜெனிவா சர்வதேச மாநாட்டு நிலைய மண்டபத்தில் பேச்சுகள் தொடங்கின.

பேச்சின் அங்குரார்ப்பண வைபவத்துக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டு மற்றும் இலங்கைச் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் உட்பட

(09ஆம் பக்கம் பார்க்க)

## கௌரவமான அமைதியை ஏற்படுத்தும் அடிப்படைச் சூழலை பேச்சு உருவாக்கும்

### ஆரம்ப உரையில் அரச குழுவின் தலைவர் கூறுகிறார்

ஜெனிவா, ஒக்.29

கௌரவமான அமைதியை நாட்டில் உருவாக்குவதற்கான அடிப்படைச் சூழ்நிலைக்கு இந்தப் பேச்சுகள் உதவும். உண்மையான ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் அடிப்படையில் அமைதி உருவாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தனது ஆரம்ப உரையில் தெரிவித்தார் அரச பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

நேற்று ஜெனிவாவில் பேச்சுகள் தொடங்கியவேளை இரண்டுதரப்பு பேச்சுக் குழுக்களினதும் தலைவர்கள் தொடக்க உரையை நிகழ்த்தினர்.

முதலில் உரையாற்றிய நிமால் சிறிபால டி சில்வா கூறியதாவது:-

அமைதி முயற்சிகளில் உள்ள ஈடுபாட்டினால்தான் அனைத்துக்கட்சி மாநாட்டை மஹிந்த கூட்டினார். மேலும் தற்போது

(09ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கையை பலப்படுத்துவதே பேச்சின்மூலம் பெறக்கூடிய உச்சக்கட்ட அடைவு

### ஆரம்ப உரையில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

ஜெனிவா, ஒக்.29

இலங்கைத்தீவில் நிரந்தர சமாதானத்தையும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் தரவல்ல போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவதே இப்பேச்சின் மூலம் பெறக்கூடிய உச்சக்கட்ட அடைவு ஆகும்.

நேற்று ஜெனிவாவில் தொடங்கிய பேச்சின் ஆரம்பத்தில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுவருகின்ற அரச வன்முறைகள் மற்றும் அரசினதும் இராணுவத்தினரதும் கடந்தகால, நிகழ்கால செயற்பாடுகளைவிரிவாக, தெளிவாக விளக்கி தனது ஆரம்ப உரையை நிகழ்த்தினார் தமிழ்ச்செல்வன்.

அவரது உரையின் விவரம் வருமாறு:-

இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அயராத முயற்சிகளை மேற்கொண்டுவரும் நோர்வே அரசுக்கும்

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கபூர்வ முடிவு எதுவுமில்லை

ஜெனிவா, ஒக்.29

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று ஆரம்பமான முதல் நாள் பேச்சுக்களில்ஆக்க பூர்வமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை, பேச்சில் முன்னேற்றம் [illegible] இல்லை.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான

([illegible]ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போர்நிறுத்த உடன்படிக்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகளை நடத்துவதற்கு இடமளித்து உதவிய சுவிற்ஸர்லாந்து அரசுக்கும் முதலில் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இணைத்தலைமை நாடுகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து எமக்கு சமாதானத்திலுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம் ஐந்து வருடத்திற்கு, முன்பு மார்கழி 24.2001இல் நாம் ஒரு தலைப்பட்சமாக ஒரு மாதத்திற்கு யுத்தநிறுத்தம் ஒன்றினைப் பிரகடனப்படுத்தினோம். இலங்கை அரசு எமது சமாதான சமிக்ஞைகளை ஊதாசீனப்படுத்தியது. நோர்வே அனுசரணையாளரின் அயராத உழைப்பினால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டது. எமது தேசியத் தலைவரும் ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதில் கையொப்பமிட்டனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு சர்வதேச மட்டத்தில் அமோக வரவேற்புக் கிடைத்தது. இதுவரை காலமும் சர்வதேச ஆதரவுடன் இரு தரப்பினராலும் கையொப்பமிடப்பட்டு அமுலுக்கு வந்த ஒரேயொரு ஒப்பந்தமாக இது விளங்கியது. இராணுவ சமநிலை காரணமாக ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் பல தசாப்தங்களாக இடம்பெற்று வரும் இனப்பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் என நாம் நம்பினோம்.

## அரசியலமைப்புச் சாக்குப்போக்கு

ஆறுசுற்று நேரடிப் பேச்சுகளில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் வாழும் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையினைக் கொண்டுவருவதற்கான பல முன்மொழிவுகள் கொண்டுவரப்பட்டன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பயன்களை எமது மக்கள் அனுபவிப்பதற்காக ஓர் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்குக் கோரினோம். சிறிலங்கா அரசியலமைப்பைக் காரணங் காட்டி அதுவும் மறுக்கப்பட்டது. பின்னர், வடகிழக்கில் இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கான முக்கிய அமைப்பாக சிரானை செயற்படுத்த அரசு உறுதிமொழி வழங்கியும் அது செயலற்றதாக்கப்பட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்துவதாகவன்றி வலுச்சமநிலையைக் குழப்புவதாகவே அமைந் தது. தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது எட்டாக்கனியாகவே இருந்தது.

சிரான் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, பேச்சுவார்த்தை முடக்கப்பட்ட நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் மக்களின் வாழ்நிலையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்து வதற்கான அவசர தேவையினை கருத்திற்கொண்டு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆலோசனையை முன்வைத்தோம். பேச்சுக்கள் இதனடிப்படையில் மீள ஆரம்பிப்பதை தடுக்கும் நோக்கோடு நாடாளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது. தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஆதரித்த தமது 22 பிரதிநிதிகளை தமிழ் மக்கள் தெரிவு செய்தனர். இவர்கள் தமிழர் தாயகத்தின் அதீத பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்றனர். இருப்பினும் சிறிலங்கா அரசு மக்களின் குரலை உதாசீனம் செய்து இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் பற்றிப் பேசுவதற்கு வரமறுத்தது.

இக்காலகட்டத்தில் எமது தாயகப் பகுதியில் சுனாமிப் பேரவலம் டிசம்பர் 2004இல் நிகழ்ந்தது. எமது கட்டமைப்புக்கள், படையணிகளோடு இணைந்து உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களுமே, நினைத்துப்பார்க்க முடியாத அவலத்தை சந்தித்த எமது மக்களுக்குக் கைகொடுக்க முன்வந்தனர்.

சர்வதேச சமூகம் மிகப்பெரிய அளவில் சுனாமி உதவியினை வழங்குவதற்கு முன்வந்தபோதிலும் இந்தத் தீவில் சுனாமி அவலத்தின் மிகப் பெரிய பங்கிற்கு முகம்கொடுத்த எமது தாயகப் பகுதிக்கு மிகக் குறைவாகவே சர்வதேச உதவி எட்டியது. சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஆறு மாதத் திற்குப் பின்பு இருதரப்பு மற்றும் பன்னாட்டு நன்கொடையாளர்களின் ஊக்குவிப்புடனும் நோர்வேயின் அனுசரணையுடனும் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் சர்வதேச உதவி தமிழர் தாயகத்தையும் எட்டச் செய்து சமாதான முன்னெடுப்புகளுக்கும் பெரும் அனுசரணையாக இருந்திருக்கும். இதுவும் அரசியலமைப்பை சாட்டாக வைத்து நிராகரிக்கப்பட்டது.

வடகிழக்கு இணைக்கப்பட்டது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று அண்மையில் சிறிலங்கா நீதிமன்றம் தீர்ப்பளித்தமையானது இந் நீதிமன்றம் சிங்களப் பெரும்பான்மைப்போக்கிற்கு உதவுகின்ற தொடர்ச்சியான செயற்பாட்டின் ஓர் அங்கமாகக் கருதப்படவேண்டும் என்பதையே காட்டுகின்றது.

வடக்கு-கிழக்கு தமிழர்களின் தொன்மையான தாயகப் பிரதேசம். ஆயிரமாயிரம் வருடங்களாக இது தமிழர் தாயகப்பிர தேசமாகவே இருந்திருக்கிறது. சிறீலங்கா நீதிமன்றத்தின் அண்மைய தீர்மானமானது சிறிலங்கா அரசியலமைப்பின்கீழ் சிறிலங்காப் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என்ற கருத்திற்கு குவிந்து வரும் சாட்சியங்களில் ஒன்றாக அமைந்திருக்கின்றது.

## ஜெனிவா - 1 உம் ஒட்டுக் குழுக்களும்

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ யதார்த்தவாதியாகத் தன்னை இனங்காட்டிக்கொண்டு ஜனாதிபதிப் பதவிக்கு வந்தார். அவர் 2006 ஆம் ஆண்டு முற்பகுதியில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுல்படுத்துவது பற்றி பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். இக்காலகட்டத்தில் கண்காணிப்புக் குழு, ஒட்டுக்குழுக்களைப் பற்றியும் அரச படைகள் அவர்களுடன் சேர்ந்தியங்குவது பற்றியும் தம்முடைய விசாரணைகள் அடங்கிய ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது.

டிசம்பர் 2005 இலிருந்து பேச்சுக்களுக்கான இணக்கம் ஜனவரி 26 இல் அடையுமட்டும் ஒட்டுக் குழுக்களின் வன்முறைகள் மிக வேகமாக அதிகரித்தன. கண்காணிப்புக் குழுவின் ஒட்டுக் குழுக்கள் பற்றிய அறிக்கை இவ்வன்முறைகளில் எவ்வித மாற்றத்தினையும் கொண்டுவரவில்லை. இத்தீவு முழுமையான நிழல் யுத்தம் ஒன்றிற்குத் திரும்பியது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் நிலமைகள் வளர்ந்து வருவதுபற்றி நாம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூறினோம்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசு விலகிச் செயற்படும் ஒட்டுக்குழுக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே உள்ள ஒத்துழைப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் நாம் ஆதாரங்களுடன் சமர்ப்பித்தோம். உயர்பாதுகாப்பு வலயங்களினால் மக்கள் அடையும் நெருக்கடி பற்றியும் உணர்த்தப்பட்டது. தமிழ் மக்களது விவசாய நிலங்கள், மீன்பிடிப்பிரதேசங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், வீடுகள் என்பன இராணுவ மயமாக்கப்பட்டமை பற்றி நாம் சுட்டிக்காட்டினோம். அத்தோடு இதனால் எமது அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் கொலை செய்யப்படுவதையும் எடுத்துரைத்தோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.13 இற்கமைய தமிழர் தாயகத்தில் நாம் செய்துவந்த எமது அரசியல் வேலைகளை இவ்வன்முறைகளினால் நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானோம். இவ்வாதாரங்களைக் காட்டி யுத்தநிறுத்த உடன்படிக்கையின் சரத்து 1.8 , 1.13களை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொண்டோம்.

சமாதான நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு யுத்தநிறுத்தம் 100வீதம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற ஒப்பந்தத்துடன் ஜெனீவாப் பேச்சுவார்த்தை முடிவடைந்தது. அடுத்த சுற்றுப்பேச்சுக்கான திகதியும் தீர்மானிக்கப்பட்டது. ஜெனீவா-1 பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட உடன்பாட்டினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதிலேயே அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை தங்கியிருக்கின்றது என்பதை நாம் வலியுறுத்தினோம். நேர்மையான யுத்தநிறுத்த அமுலாக்கலையே நாம் எமது மக்களுக்காக அரசிடமிருந்து எதிர்பார்த்தோம்.

## ஜெனீவா-1 இன் பின்பு - பிரகடனப்படுத்தப்படாத போர்.

கவலைக்கிடமாக, ஜெனீவாவில் உடன்பாடு கண்ட எவையுமே இலங்கை அரசினால் அமுல்படுத்தப்படவில்லை. மாறாக, இலங்கை அரசின் நடவடிக்கை தமிழர் தாயகப் பிரதேசத்தின் நிலமையை மோசமாக்கி எம்மையும் தமிழ் மக்களையும் விரக்தியின் விளிம்பிற்கு இட்டுச் சென்றது. சிறிலங்கா இராணுவத்தின் அப்பட்டமானதும் கொடூரமானதுமான குழந்தைகளினதும் சிறுவர்களினதும் படுகொலைகள் உள்ளூரிலும் வெளியூரிலும் வாழும் தமிழர் மனங்களை உறையச்செய்தன.

சர்வதேச சமூகம்கூட இச்சம்பவங்களைப் பற்றி தமது அதிர்ச்சியை வெளிப்படுத்தியது. இலங்கை இராணுவம் சர்வதேச சமூகத்தினால் தனது படுகொலைகள் கண்டனத்திற்குள்ளாகும்போது நேரடி வன்முறைகளிலிருந்து விலகி ஒருபடி மேலே சென்று விமானத்தாக்குதல், ஆட்டிலறித் தாக்குதல் மூலம் பொதுமக்கள் கொலைகளில் ஈடுபட்டது. திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் மக்கள்மீது தரை, கடல், விமானத்திலிருந்து தாக்குதல் மேற்கொண்டது. இதன்மூலம் பிரகடனப்படுத்தப்படாத போரில் அரசு இறங்கியது. நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

இலங்கை அரசின் அழுத்தத் தினால் ஐரோப்பிய ஒன்றியம் எமது அமைப்பின்மேல் விதித்த தடையே சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் அவ்வாறான நடவடிக்கைகளில் தயக்கமின்றி ஈடுபட உதவியது. இது சமாதான நடவடிக்கையினையும் கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டினையும் பாதிக்கும் என பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் எடுத்துக் கூறினோம்.

இத்துரதிர்ஸ்ட நிலையை நாம் கண்காணிப்புக் குழுவிற்குச் சுட்டிக்காட்டியபோது அவர்கள் அதைப் புரிந்துகொண்டனர். இலங்கை அரசு எம்மீது தடை விதிக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கறைபூசுவதற்கு முயன்றமையானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கத்திற்குள்ள அக்கறையின்மையினையே எடுத்துக்காட்டுகின்றது.

ஜெனீவா உடன்பாடுகள் அமுல்ப்படுத்தப்படாத நிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்கு எம்மை அழைத்திருந்தார்கள். நாம் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு அது முக்கியமானது என்பதையும் மதித்து நோர்வேயின் அழைப்பை ஏற்றோம்.

முன்னைய நேரடிப் பேச்சுக்களில் எடுத்துக் கொண்ட உடன்பாடுகள் எவையும் அமுல்படுத்தப்படாத நிலையில் ஒஸ்லோவில் அரசுடனான நேரடிப் பேச்சுக்கள் சாத்தியமற்றதாகியன.

எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்குரிய உத்தரவாதங்கள் கிடைக்கப்படாத பேச்சுவார்த்தைகளில் நாம் பங்குபற்றமாட்டோம் எனக் கூறினோம். இருப்பினும், நோர்வேயுடனும் கண்காணிப்புக் குழுவுடனும் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுபற்றிக் கலந்துரையாடினோம். ஆனால் சிறிலங்கா அரசு கண்காணிப்புக் குழுவின் முக்கியத்துவத்தை உதாசீனம் செய்து எவ்வித ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்றாமல் வெளியேறியது. அவர்கள் தீவிற்குத் திரும்பியதும் இராணுவ வன்முறைகள் மேலும் தீவிரமடைந்ததுடன் பிரகடனப்படுத்தப்படாத போர் ஒன்றையும் ஆரம்பித்தனர்.

இக்கால கட்டத்தில் ரோக்கியோவில் நடந்த இணைத் தலைமை நாடுகளின் சந்திப்பைத் தொடர்ந்து அது ஒட்டுக்குழுக்களின் வன்முறையை நிறுத்துமாறும் தீவு முழுவதும் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது. அத்தோடு எமக்கு சமாதானத்தின்பால் உள்ள ஆர்வத்தினையும் வரவேற்றது. எமது செயற்பாடுகளை ஆதரித்து 15 வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் ஒரே தினத்தில் உரிமைக் குரல் என்ற எழுச்சி நிகழ்வைக் கொண்டாடி அவர்களின் ஆதங்கங்களையும் அபிலாசைகளையும் தீர்த்துவைக்கும் பிரதிநிதிகளாக எம்மை வரித்துக் கொண்டார்கள்.

தமிழர் தாயகத்தில் பிரகடனப்படுத்தப்படாத போர் தீவிரமடைந்துகொண்டு வந்தது. கவலைக்கிடமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை இதற்கு ஒரு காரணமாக இருந்தது. நான்கு வருட யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் சந்திக்காத அவலங்களை எமது மக்கள் சந்தித்தனர். திருகோணமலையிலும் வாகரையிலும் எமது தளங்கள் மீதே இராணுவம் தாக்குதல் மேற்கொண்டது. இது நாம் காத்து வந்த பொறுமையை சோதித்தது. நாமும் சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். அரசின் தாக்குதல்களை நிறுத்தும் முகமாகவே எமது தற்காப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

## மாவிலாறு

திருகோணமலையில் உருவான மாவிலாறு விடயம் சிறிலங்கா அரசின் தொடர்ந்து வரும் நிலைப்பாட்டின் ஓர் அங்கமே. தமிழ் சிங்கள சமூகத்தவர்களிடையேயான நீர் விநியோகத்திலேயே பிரச்சினை ஆரம்பமானது. தமிழ் மக்கள் தாம் நீர் விநியோகத்திலும் புனரமைப்புக்களிலும் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தினர்.

தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துமுகமாக மாவிலாறு மதகின் கதவுகளை மூடினர். இக் கதவுகள் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளதால் நாம் எமது மக்களுடன் [illegible] இப்பிரச்சினைக்குத் தீர்வுகொண்டுவர முயற்சித்தோம். ஒரு சிவில் அதிகாரி மக்களை அணுகி அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்ப்பதன் மூலம் இவ்விடயத்திற்கு முடிவுகொண்டு வந்திருக்கலாம்.

இலங்கை அரசு ஒரு சிவில் பிரச்சினைக்கு சிவில் அணுகுமுறையை ஊதாசீனம் செய்து இராணுவ ரீதியில் கதவைத் திறக்க முயற்சித்தது. அதற்காகப் பல புதிய போர்முனைகளைத் திறந்தது. எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் பாரிய ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டது. இந்த இராணுவ நகர்வை நிறுத்தவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கும் மூதூர் பிரதேசத்திலிருந்தே இராணுவ நகர்வுகளும் எறிகணை தாக்குதல்களும் நடத்தப்பட்டமையால் மூதூரிலுள்ள இராணுவ நிலைகள் மீது எமது நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இராணுவம் மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்திப் பலரை கொன்றுவிட்டு எம்மீது பழி சுமத்தியது. இந்நிலையில் நாம் எமது பழைய நிலைகளுக்குத் திரும்பினோம்.

இதற்கிடையில் அச்சமயம் கிளிநொச்சியில் தங்கியிருந்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பவரோடு இது பற்றிக் கலந்துரையாடினோம். அவருடைய ஆலோசனையின்படி எமது கட்டுப்பாட்டிலுள்ள பூட்டியிருந்த மதகுக் கதவுகளை கண்காணிப்புக் குழுவினரோடு சென்று திறந்து விடுவதாக முடிவெடுத்தோம். கண்காணிப்புக்குழுத் தலைவரோடு அவ்விடத்திற்குச் சென்றோம். எமது வருகையை அறிந்த அரசபடைகள் அணைக் கட்டின் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தின. கண்காணிப்புக் குழுத் தலைவரினதும் ஏனைய கண்காணிப்பாளர்களினதும் உயிர்கள் ஆபத்திற்குள்ளாகின. அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றாமல் திரும்பினர். மறுநாள், மதகுகள் எம்மால் திறந்து விடப்பட்டன.

இந்த சிவில் பிரச்சினைக்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கை சிறிலங்கா அரசாங்கத்தின் இரகசிய இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைந்தது. இதற்கு அது 10,000 துருப்புக்களை பயன்படுத்தியமை எம்மை திருகோணமலையிலுள்ள சம்பூரிலிருந்து வெளியேற்றும் நோக்கம் கொண்டதாகவே தோற்றமளித்தது.

கண்காணிப்புக்குழுவும் "இந்த நடவடிக்கைகள் தண்ணீருக்கானவையல்ல, வேறு நோக்கம் கொண்டவை போலத் தோன்றுகின்றது" என்று குறிப்பிட்டமை. பலரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அரசு எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை கைப்பற்றி இதன் மூலம் உடன்படிக்கையிலிருந்து விலகியது.

## வலிந்த இராணுவத் தாக்குதல்கள்

இராணுவம் வலிந்த தாக்குதல்களை நடத்திய போதெல்லாம் நாம் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரியப்படுத்தியும் அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கி அவர்களை அவ்விடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டியுமிருந்தோம்.

குறிப்பாக, கிழக்கில் தாக்குதல்கள் இராணுவத்தாலேயே முன்னெடுக்கப்பட்டன என்பதை கண்காணிப்புக் குழுவினர் ஏற்றுக்கொண்டனர். அத்துடன் திருகோணமலை, அம்பாறை என தொடர்ந்த தாக்குதல்கள் யாழ்.குடாவின் முகமாலை முன்னரங்க நிலைக்கும் சென்றன.

உடன்படிக்கை சரத்து 2.7 இல் ஒப்புக்கொள்ளப்பட்ட 16 பாதைகளில் பல அரசினால் மூடப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கான ஒரேயொரு தரைப்பாதையான ஏ-9 பாதையும் மூடப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு செல்லும் விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டது. முகமாலைத் தாக்குதல்கள் தொடர 24 மணித்தியால ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்களின் நாளாந்த வாழ்வை இது மிகவும் பாதித்தது. இத்தாக்குதல்கள் எம்மாலேயே ஆரம்பிக்கப்பட்டன என அரசாங்கம் குற்றம்சாட்டியது.

நாம் உடன்பாட்டு விதிகள் 3.8, 3.9 இன் பிரகாரம் கண்காணிப் புக்குழுவின் பாதுகாப்பிற்கும் அவர்களின் நடமாடும் சுதந்திரத்திற்கும் அனுமதி வழங்கி களத்தில் சென்று உண்மை நிலைகளை அறியச் சொன்னோம். ஆயினும், அரச படைகள் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் உண்டு எனவும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது எனவும் மறுத்து அவர்கள் பிரசன்னத்தைத் தடுத்தன.

இதனால் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு வலுவிழந்தது. இதனைச் சாதமாகப் பயன்படுத்தி வலிந்த தாக்குதலை இராணுவம் தொடர்ந்து முன்னெடுத்தது.

இப்படியான ஒரு சூழலில்தான் நோர்வேயினதும் இணைத் தலைமை நாடுகளினதும் வேண்டுகோளிற்கிணங்க நாம் நல்லெண்ண சமிக்கையாக ஓர் நிபந்தனையற்ற நேரடிப் பேச்சுவார்த்தைக்கு இணங்கினோம்.

அரசு நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு காலமிழுத்து இணங்கியபோதிலும், தனது வலிந்த இராணுவ நடவடிக்கைகளையும் விமானத் தாக்குதலையும் தொடர்ந்தது. பேச்சுக்களுக்கு முன்னர் எம் மீது பாரிய போரைத் திணிக்க அரசு முயன்றது. நாம் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரி வித்த அதே சமயத்தில் வாகரையில் வலிந்த தாக்குதல்களை இராணுவம் மேற்கொண்டது. சிறிலங்கா அரசு போலிக்குற்றச்சாட்டுகளை முன்வைத்து பாரிய படை நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றால் எமது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டி ஏற்படும் எனத் தெரியப்படுத்தினோம்.

ஏ-9 பாதை மூடப்பட்டதால் ஏற்பட்ட மக்களின் அவலங்களைக கருத்தில் கொண்டு அது திறக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம். அதற்கான எமது பூரண ஒத்துழைப்பையும் வழங்குவதாகச் சொன்னோம்.

இலங்கை அரசு எமது நல்லெண்ணச் சமிக்ஞையை நிராகரித்து ஒரு புதிய வலிந்த தாக்குதலை முகமாலையில் மேற்கொண்டது. இதனை எதிர்த்து நாம் எமது நிலைகளில் இருந்து தற்காப்புத் தாக்குதல் நடாத்தினோம். பெரும் இழப்புக்களைச் சந்தித்த நிலையில் அரச படைகள் தாக்குதலை நிறுத்திக்கொண்டன. மக்களின் அவல நிலை பற்றி அதனுடைய கரிசனையற்றபோக்குத் தொடர்ந்தது.

## மனிதாபிமானப் பணியாளர்களைத் தடுத்தல்

வாகரையில் இடம்பெயர்ந்திருக்கும் 50,000 அகதிகளுக்கு உதவி செய்வதற்கு மனிதாபிமான உதவிகள் செய்யும் அமைபபுகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்கள்கூட சிறிலங்கா அரசின் கடும்போக்கை மாற்ற வில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் பல மனிதாபிமான அமைப்புக்களின் வேலைகள் சிறிலங்கா அரசின் எரிபொருள், கட்டுமானப் பொருள் தடையினால் முடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவமனையில் தமது பணிகளைப் புரிந்துவந்த எம்.எஸ்.எவ் மருத்துவ நிறுவனத்தின் 4 நிபுணர்களை சிறிலங்கா அரசு வெளியேற்றியுள்ளது. இதைவிட ஐ.சி. ஆர்.சி நிறுவனத்தினால் கிளிநொச்சி மருத்துவ சேவை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட வைத்திய நிபுணர் குழு ஒன்றிற்கு சிறீலங்கா அரசு அனுமதி மறுத்துள்ளது. தற்பொழுது கிளிநொச்சி மருத்துவமனையில் மருத்துவ நிபுணர் ஒருவர்கூட இல்லை.

## மக்கள் கொலையும் இடம்பெயர்வும்

சர்வதேச ஆதரவுடன் நடை முறைப்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் காலத்தில் பொதுமக்களின் கொலைகளும் காணாமல் போதலும் தொடர்கின்றன.

சிறிலங்கா இராணுவம் ஒட்டுப்படைகளைக் கருவியாகப் பயன்படுத்தி ஜெனிவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 870 பொதுமக்கள் கொலை செய்தும், 408 மக்களை காணாமல் போகச் செய்தும் இருக்கிறது. இவர்களில் 98 பேர் சிறுவர்கள்.

இரவில் இராணுவ நடமாட்டத்தின் பொழுது நாய் குரைப்பதால் பீதியில் நித்திரையற்ற நிலையில் மக்கள் உள்ளார்கள். முக்கியமாக யாழ்ப்பாணத்தில் பீதி மிக அதிகமாகவே உள்ளது. அல்லைப்பிட்டியில் இரு குழந்தைகள் பெற்றோரின் அரவணைப்பில் தூங்கும்போது குடும்பமாகவே கொலை செய்யப்பட்டனர்.

இரண்டு வயதுக் குழந்தையைத் தூக்கி வைத்திருந்த தகப்பனுடன் சேர்த்து அந்தக் குழந்தையும் கொல்லப்பட்டது. பட்டினிக்கெதிரான அமைப்பின் 17 பணியாளர்கள் திருகோணமலையில் குப்புறப்படுத்த நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். அண்ணளவாக 300 சிறுவர்கள் அம்பாறை யிலும் மட்டக்களப்பிலும் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தை யின் பொழுது அரச குழுவின் தலைவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டதைப் பற்றியும் திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதைப் பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசேப பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டதைப் பற்றியும் விசாரணைகள் நடத்துவதாகவும் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் கூறினர். இவ்விசாரணைகளுக்கு என்ன நடந்தது?

பாரபட்சமற்ற வான் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் அதேயளவான பொதுமக்களின் உயிர்களைக் காவுகொண் டுள்ளன. 53 மாணவிகள் முல்லைத்தீவில் கொல்லப்பட்டனர். புதுக்குடியிருப்பில், குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 2 குழந்தைகளும் உள்ளடங்குவர். மட்டக்களப்பில் நிறைமாதக் கர்ப்பிணியின் வயிற்றில் எறிகணைச் சன்னங்கள் தாக்கியதால் வயிற்றிலேயே குழந்தை இறந்தது.

ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 643 மக்கள் தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெயர்ந்துள்ளார்கள். திருகோணமலையில் இடம்பெயர்ந்த பெரும்பான்மையானோருக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி கிட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அனேக மக்கள் மழையிலும் மரங்களின் கீழுமே வாழ்கின்றார்கள். ஒரு தாய் மழை நேரத்தில் மரத்தின் கீழ் குழந்தையைப் பிரசவித்தார். பெற்றோர் இரவில் மழை பெய்யும்போது எழும்பி தமது குழந்தைகளை மழையிலிருந்து காப்பாற்றும்விதமாக அவர்களின் தலைகளின்மேல் கிடைத்ததைக் காப்பாகப் பிடித்திருக்கிறார்கள்.

கடனெடுத்து நெல் விதைத்தோர் தமது பயிர்களை விட்டுவிட்டு இடம்பெயர்ந்து கடனை அடைக்க முடியாத நிலையில் உள்ளார்கள். 81 பாடசாலைகள் அழிக்கப்பட்டோ அல்லது இடப்பெயர்வினால் செயற்படாமலோ உள்ளன. இது பாதுகாப்பு வலையத்தினால் முடக்கப்பட்ட 68 பாடசாலைகளுக்கு மேலதிகமானது.

ஏ-9 பாதை மூடப்பட்டதால் ஏற்பட்ட பட்டினிச் சாவு உள்ளிட்ட பொருளாதார நெருக்கடி கொடூரமான, வேண்டுமென்றே எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். குழந்தைகள் பால்மா இல்லாமல் போசாக்கற்று அவர்களுடைய வளர்ச்சியில் நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் உள்ளார்கள். மீனவர்கள் இரவு ஊரடங்குச் சட்டத்தினால் தமது வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள்.

விவசாயிகள் நெருக்கடி நிலைமையாலும் எரிபொருள் தட்டுப்பாட்டாலும் விதை நெல் தட்டுப்பாட்டாலும் தமது பயிர்ச் செய்கைகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளார்கள். நாளாந்த சம்பளத்திற்கு உழைப்போருக்கு வேலையில்லாமல் அவர்களது குடும்பங்கள் பட்டினியை எதிர்நோக்கும் நிலையில் உள்ளன.

எமது பகுதிகளுக்கு எரிபொருள் எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினால் விதிக்கப்பட்ட தடையும் யாழ்ப்பாணத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடும் அங்குள்ள பிரதான மருத்துவமனைகளின் செயற்பாடுகளை முடக்கி யுள்ளன. மின்சார உற்பத்திக்கு எரிபொருளையே நம்பியிருக்கும் இடங்களில் இந்தத் தடை எத்தகைய மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இலங்கை இராணுவத்தினதும் அதனது ஒட்டுக் குழுக்களினதும் கைகளில் மக்கள் படும் அவலங்கள் பற்றிய பட்டியல் நீண்டு கொண்டேபோகும்.

இத்தீவில் நிரந்தர சமாதானத்தையும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் தரவல்ல போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவதே இப்பேச்சுவார்த்தை மூலம் நாம் பெறக்கூடிய உச்சக்கட்ட அடைவு ஆகும். மூன்று தசாப்த காலப் போரைத் தணிவுக்குக் கொண்டுவந்த பெருமை இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு உண்டு. இதனை அமுல்படுத்துவதில் சர்வதேசத்தின் பங்கு மிகவும் காத்திரமாக இருக்கிறது. இலங்கை அரசின் மேல் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் அதனுடைய இனப்படு கொலைக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தி அதனுடைய போர் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதையும் நிறுத்தும் வல்லமை சர்வதேச சமூகத்திற்கு உண்டு.

சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தையில் பங்கு கொள்வதை நாம் வரவேற்கின்றோம். இங்கு அவர்கள் தமிழர் தாயகத்தில் உள்ள மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நூறு வீதம் அமுல்படுத்தவும் கண்காணிப்புக்குழுவின் பணிக்கு வலுச் சேர்க்கவும் உதவும்படி சர்வதேச சமூகத்தையும் இணைத் தலைமை நாடுகளையும் நோர்வே அனுசரணையாளர்களையும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நடவடிக்கையானது எமது மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைக் கொண்டுவரவும் அதனூடாக சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் ஒரு திருப்தியான தீர்வை எட்டுவதற்கும் உத்தரவாதமளிப்பதற்கும் உதவும் என்று நாம் நம்புகின்றோம் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# எதிர்பார்ப்பது எங்ஙனம்?

நாட்டின் சகல தரப்பு மக்களாலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை நிர்ணயிக்கப்பட்டவாறு நேற்று சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவாவில் ஆரம்பமாகியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் நடைபெறும் இரண்டாவது பேச்சுவார்த்தை இது. இவ்வருடம் பெப்ரவரி 22, 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெற்ற முதலாவது பேச்சுகளில், மீண்டும் ஏப்ரல் மாதம் 19-21ஆம் திகதிகளில் இரு தரப்புகளும் சந்தித்துப் பேசுவது என்று இணங்கப்பட்டிருந்தது.

ஆனால், அதற்கு வாய்ப்பில்லாமற் செய்யும் விதத்தில், ஏப்ரல் முதல் வாரத்தில், திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் மாமனிதர் வ.விக்னேஸ்வரன், அவர் பணிபுரிந்த வங்கி அலுவலகத்தில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தோடு, வடக்கு - கிழக்கில் படுகொலைகளும் வன்செயல்களும் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தன; இன்னும் தொடர்கின்றன.

எத்தனையோ இடக்கு முடக்குகளின் பின்னர், அரசாங்கத்தின் மேலோங்கித் திமிரினால் சமாதானப் பேச்சுகள் நடைபெறுமா என்ற சந்தேக நிலை தோன்றியது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணான வகையில் - அதனை அப்பட்டமாக மீறும் விதத்தில்-அரச படைகள் தமிழ்ப் பிரதேசங்களில் வலிந்த தாக்குதல்களை நடத்தின.

அத்தகைய தாக்குதல்களை நடத்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றி, இராணுவ பலத்தில் தாம் மேலோங்கி நிற்பதாகக் காட்டி -

விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் கொடுத்து, தாம் நினைத்த - தமக்குச் சார்பான-ஒரு தீர்வை முன்வைப்பதே அரசன் முழு நோக்கமாகவும் இருந்தது.

அரசாங்கத்தின் இந்தத் தந்திரத்தனமான நோக்கத்தினால், சமாதானப் பேச்சுகளுக்கான புறச்சூழ்நிலை முழுமையாகவே அற்றுப்போகும் கட்டம் தோன்றியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சட்டைசெய்யாமல் இராணுவ நடவடிக்கைகளைத் தொடுத்ததோடு மட்டுமல்லாமல்-

பெப்ரவரியில் நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தையின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு வெளிப்படையாகவே பின்னடித்து வந்தது.

சமாதானப் பேச்சு தேக்க நிலைமை எய்துவதற்கும் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கை அறுந்து போனதற்கும் அதுவே அத்திபாரம் என்றும் கூறலாம்.

இதனை நேற்றைய சமாதானப்·பேச்சுகளைத்தொடக்கி வைத்துப் பேசிய நோர்வேயின் அமைச்சர் சொல்ஹெய்ம் தமது ஆரம்ப உரையில் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜெனீவா-1 பேச்சுகளின் போது எட்டப்பட்ட முடிவுகளை, நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய அந்தப் பாரதூரமான குற்றம் நிச்சயமாக மஹிந்த அரசாங்கத்தையே சாரும்.

மேலும், அமைதி நிலையைக் குழப்பி, வன்செயல்களை அதிகரித்து தமிழ் பிரதேசங்களைத் தனது அடக்குமுறையின்கீழ் வைத்திருக்கும் ஒவ்வாத நோக்கத்தின் பாற்பட்டு அரசு விதைத்த செயற்பாடுகளால் தமிழ் மக்கள் என்றுமே இல்லாத அளவுக்கு அவலங்களையும் அழிவுகளையும் அனுபவித்து வருகிறார்கள்.

இதில் மிகக் குறிப்பாக எடுத்துக்காட்டப்பட வேண்டியது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் மனிதப் பேரவலம்.

அதற்கு மூலகாரணி ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளமையே என்பது உலகறிந்த உண்மை.

ஆனால், இதில் வேடிக்கை என்னவெனில், தமிழர்களின் மனித அவலம், மனிதாபிமானப் பிரச்சினை அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு ஓர் அற்ப விடயமாகத் தோன்றுவதுதான்.

தமது இராணுவ நலன்களைப் பாயின் கீழ் விரித்து வைத்துக்கொண்டுள்ள, அரச தரப்பினருக்கு யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை கடுகு போலத் தெரிகிறது.

குருட்டு நியாயமும், விதண்டாவாதப் பேச்சும், குதர்க்கம் நிறைந்த வாதமும் செய்ய வல்லவர்களான அமைச்சர்களையும், எம்.பிக்களையும் தம்பக்கம் சேர்த்து வைத்திருக்கிறார் என்றால் -

சின்னப்பிள்ளைத்தனமாக, தமிழர்களின் அவலங்களை கணக்கில் எடுக்காத "மெத்தப் படித்த மேதாவிகளையும்" அரச உயர் பதவிகளில் அமர்த்தியிருக்கிறார் ஜனாதிபதி.

அர்த்தபுஷ்டியாக, தர்க்கத் தகைமையுடன் கருத்துச் சொல்ல முடியாவிடினும் பகுத்துணர்ந்து மற்றவர்கள் மனம் புண்படாமல் பேசத் தெரிந்தவர்களே தலைமைப் பதவிகளில் இருக்கத் தகுந்தவர்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனுபவித்துவரும் பேரவலத்தை - மிகப் பெரிய மனிதாபிமானப் பிரச்சினையை- சின்ன விடயமாகப் பார்க்கிறார் அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹென்ன!

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் -

சிறுசிறு விடயங்களைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வை எட்டுவது தொடர்பாகவே ஜெனீவாவில் பேசுவோம் - என்று அவர் கூறியிருக்கிறார். தமிழ் மக்களின் வாழ்வுப் பிரச்சினை சிறிய விடயமாக அவருக்குத் தோன்றுகிறது! மிகப்பெரிய மனிதாபிமானப் பேரவலத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை அவரால்.

இத்தகைய அதிகாரிகளினால் எவ்வாறு தமிழ்மக்களின் அபிலாசையைப் புரிந்துகொள்ளமுடியும். குடாநாட்டு மக்களைத் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் வைத்துக் கொண்டு, அரைப்பட்டினி, கால்பட்டினி போட்டுக் கொண்டு அதனைச் சின்ன விடயமாகக் கருதும் அதிகாரிகளால் எவ்வாறு தமிழர்களின் நீண்டகால அரசியல் போராட்டத்துக்குப் பயன் விளைவிக்கும் - தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும்-தீர்வு குறித்துச் சிந்திக்க முடியும்?

அதிகாரிகள் அவ்வாறெனில், அவர்கள் அண்டியுள்ள அரச உயர்மட்டம், தமிழர் பிரச்சினையை நியாயபூர்வமாகவும் மனச்சாட்சியுடனும் அணுகும் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்?

# நாவாந்துறை நலன்புரி நிலையத்தில் மழையால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

## 68 குடும்பங்கள் அவல நிலையில்

யாழ்ப்பாணம்,ஒக்.29

நாவாந்துறை கதீஜா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இயங்கும் நலன்புரி நிலையத்திற்கு உரியமுறையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் - தற்போது பெய்துவரும் மழையால் - அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது.

இதன் காரணமாக அங்கு தங்கியுள்ள 68 குடும்பங்கள் பெரும் அவல நிலையை அடைந்துள்ளன என்று முகாம் பொறுப்பாளர் திருமதி ரவீந்திரன் பரமேஸ்வரி தெரிவித்தார்.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் இந்த முகாமில் தங்கியுள்ளன.

நாவாந்துறை கதீஜா முஸ்லிம் மகா வித்தியாலயக் கட்டடங்கள் கடந்த காலங்களில் நடைபெற்ற போர் காரணமாகச் சேதமடைந்தவை.

கூரை முற்றாக இல்லாத வித்தியாலயக் கட்டடத்தின் கீழ்த்தளத்திலேயே இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர்.

கீழ்த்தள வகுப்பறைகளில் மழை ஒழுக்கால் ஏற்படும் வெள்ளம் ஒருபுறம். வகுப்பறைகளின் இருபுறமும் அடிக்கும் தூவானம் போன்றவற்றால் அங்கு இருக்கவோ இரவு நேரங்களில் நித்திரை கொள்ளவோ முடியாத அவல நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், பாடசாலைக்குள் உள்ள வாய்க்கால் ஊடாக



மழைநீர் ஓடமுடியாதுள்ள வாய்க்கால்

மழைநீர் ஓடாது தேங்கி நிற்கின்றது.

இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துப் பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகிறது. குழந்தைகள் இதனால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நலன்புரி நிலையப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (1-203-111)

## சண்டிலிப்பாய் கோட்டப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக். 29

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 1ஐச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கவிரும்புவோர் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 6 திகதிக்கு முன்னர் 'வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம், மருதனார்மடம், சுன்னாகம்.' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வேறு வலயங்களைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் தமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## முகமாலையில் சேதமுற்ற வாகனங்களுக்கு அடுத்த வாரத்தில் காப்புறுதி நஷ்டஈடு

### செலிங்கோ காப்புறுதி பிராந்திய முகாமையாளர் தகவல்

நல்லூர், ஒக். 29

போர் அனர்த்தம் காரணமாக முகமாலையில் நிறுத்திவைக்கப்பட்ட போது சேதமடைந்த வாகனங்களுக்கு அடுத்த வாரமளவில் செலிங்கோ நிறுவனம் காப்புறுதி நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்கவுள்ளது. யாழ்.மாவட்ட செலிங்கோ காப்புறுதி நிறுவன பிராந்திய முகாமையாளர் கே. தவசீலன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 11 திகதிக்கு முன்னர் யாழ். நோக்கி பொருள்களுடன் வந்த சுமார் 60 வாகனங்கள் முகமாலையில் தரித்து விடப்பட்டன. பின்னர் அங்கு இடம்பெற்ற மோதல் காரணமாக அங்கு தரித்துவிடப்பட்ட வாகனங்களில் மிகப்பலவும் சேதமடைந்துள்ளன.

அவ்வாறு சேதமடைந்த காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களுக்குரிய நஷ்டஈட்டுக் கொடுப்பனவு அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை பூநகரி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல்களால் சேதமடைந்த கட்டடங்களுக்கும் எதிர்காலத்தில் காப்புறுதிவழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-203-111)

## பருத்தித்துறை உணவகங்களுக்கு நியாய விலையில் உணவுப் பொருள்கள்

வடமராட்சி,ஒக்.29

பருத்தித்துறை (வடமராட்சிவடக்கு) பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் தேநீர்க்கடைகளுக்கு அவ்வப் பகுதி வர்த்தகர் சங்கங்களின் சிபார்சின் பேரில் அரிசி, மா, சீனி, தேயிலை, பருப்பு போன்ற பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் வழங்கப்படவுள்ளதால் தேநீர் மற்றும் உணவு வகைகளை நியாய விலைக்கு விற்பனை செய்யவேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலரால் தேநீர் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நியாய விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் மாத்திரமே தொடர்ந்தும் தேவையான பொருள்களை வழங்கமுடிய, என அவர் தெரிவித்துள்ளார். (202-173-182)

## இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் மண் அகழ்வு

தென்மராட்சி கிழக்கு கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அண்மைய யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்களின் காணிகளிலும் வயல் நிலங்களிலும் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் -

அப்பகுதி வயல்களில் வரம்புகளையும் வெட்டி மணல் அகழ்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (202)

## தீவக அரிமாக் கழகத்திற்கு பிராந்தியத் தலைவர் வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ். பிராந்தியத் தலைவர் லயன். ரி.அன்பானந்தனும், லயன் லேடி ஏ.பற்குணதேவியும் தீவக அரிமாக் கழகத்திற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் வரவேற்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிராந்தியம் 7 வலயம் 1 இற்கு உட்பட்ட கழகத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தீவக அரிமாக் கழக உறுப்பினர்கள் சகலரையும் கலந்து கொள்ளுமாறு தீவக அரிமாக்கழகச் செயலாளர் க.கணபதி கேட்டுள்ளார்.(202-88)

## மருதங்கேணி கோட்ட மாணவர்களுக்கு காலை உணவு வழங்க ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு,ஒக்.29

மருதங்கேணி கோட்டத்திலுள்ள 6 பாடசாலைகளில் மாணவர்களுக்கான காலை உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் 'வேள்ட் விஷன்' நிறுவனம் இப்பாடசாலைகளுக்கு காலை உணவு தயாரிப்பதற்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

மரக்கறி மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு மாணவனுக்கு 3 ரூபா என்ற அடிப்படையில் பணமும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஒரு ரூபா ஐம்பது சதமே வழங்கப்பட்டுவந்தது. இத்தொகை தற்போதுள்ள பொருள் விலை யேற்றத்தால் போதாது எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து 3 ரூபாவாக அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது. (202-182)

## நாளை

ஐப்பசி 13
திங்கட்கிழமை
30.10.2006
திதி : அட்டமி
முற்பகல் : 10:30
நட்சத்திரம் : திருவோணம்
மாலை : 06.58
[illegible] : 12.03 - 01.33
ராகுகாலம் : 07.33 - 09.03

## கல்வி நிர்வாகசேவைக்கு 497 பேருக்கு நியமனம்

### இதில் 52பேர் தமிழ்பேசும் விண்ணப்பதாரிகள்

இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் III பதவிக்கு நவம்பர் முதல்வாரத்தில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சை மூலம் 497பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்

இவர்களில் 28 தமிழர்களும் 24 முஸ்லிம்களும் அடங்குவர். இந்த வருட முற்பகுதியில் நடத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் III பதவிக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 3 ஆம் திகதிமுதல் 6ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைமூலம் நியமனம் பெறும் 28 தமிழரில் - திட்டமிடல் பகுதிக்கு8, பொதுத்துறைப் பகுதிக்கு 6, சித்திரப் பகுதிக்கு 3, மேலைத்தேய சங்கீதப் பகுதிக்கு 2, கணிதத்துறைக்கு 3, விஞ்ஞானத்துறைக்கு 2, மனையியலுக்கு 2, விசேட கல்விக்கு 2, வர்த்தகம் மற்றும் உடற்கல்விக்கு தலா ஒருவருமாக இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். தமிழர்களில் ஒருவர் மூன்று துறைகளுக்கும் முஸ்லிம்களில் ஒருவர் இரண்டு துறைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.(1-203-202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப் பரீட்சை - 2006

## வினாத்தாள் - I 45 நிமிடம்

ஆசிரியர்: திரு வே.அன்பழகன்

● *பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள படத்துடன் மிக நெருங்கிய தொடர்புடைய சொற்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக*



01. 1) கிளை, குலை, வளர்தல்
2) கனி, உறுதி, நிழல்
3) குலை, உணவு, மடல்



02. 1) அழகு, துணி, அலங்காரம்
2) வியாபாரி, பிள்ளை, விருப்பம்
3) கடை, பானம், நூல்


● *கீழ்க்காணும் சோடிச் சொற்களில் மூன்றிற்கு ஏதாவது தொடர்புடையன. தொடர்பில்லாத சோடிச் சொற்களின் கீழ்க் கோடிடுக.*

03. A - வைத்தியர் - வைத்தியசாலை
B - கடல் - கப்பல்
C - சூரியன் - ஆகாயம்
D - பிச்சைகாரன் - தோட்டம்

04. A - விவசாயி - வயல்
B - பிரதானவீதி - பேருந்து
C - நீதிமன்றம் - அச்சுக்கூடம்
D - கைவாள் - அரசன்


● *பின்வரும் வினாக்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள வடிவங்களில் மிகவும் பொருத்தமாக உள்ள வடிவங்கள் இரண்டைக் காட்டும் எழுத்துக்கள் அடங்கிய விடைக்குக் கீழ்க் கீறிடுக.*

05.




i) AD
ii) AE
iii) BF

06.





i) AF
ii) BF
iii) CD


● *குறியீடுகளின் நிறைகளுக்குச் சமனான நிறைகளைக் கொண்ட குறியீடுகளை அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையின் கீழ்க் கீறிடுக.*

△ இன் நிறை = □ இன் நிறை


□ இன் நிறை = ○○ இன் நிறை


07. இதன்படி அருகே உள்ள தராசுத் தட்டுக்கள் இரண்டும் சமநிறையில் இருப்பதற்கு தராசின் வலதுபக்கத்தட்டில் சேர்க்கப்பட்ட வேண்டிய நிறையை உள்ளடக்கும் விடை பின்வருவனவற்றுள் எது?




08. அருகேயுள்ள தராசுத் தட்டுக்கள் இரண்டும் சமநிறையில் காணப்படுவதற்கு தராசின் வலது பக்கத்தட்டில் இன்னும் சேர்க்கப்பட வேண்டிய நிறை எது?






● *முதலிரண்டு சொற்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லுடன் தொடர்புடைய சொல் எது எனத் தெரிந்து கீறிடுக*

09. | பாலைவனம் - பாவம் | | மத்தளம் - .............? |
1) தளம் 2) மதம் 3) மனம் 4) தாளம்

10. | அந்தரம் - அதரம் | | ஆராய்ச்சி - .............? |
1) ஆச்சி 2) ஆராச்சி 3) ஆய்ச்சி 4) ஆராய்சி

● *சரியான விடையின் கீழ்க் கோடிடுக.*

11. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு. குணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு. குணசேகரன் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெற்றிருக்கும்?
(1) ஜனவரி (2) பெப்ரவரி (3) நவம்பர்

12. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது எனது தம்பியின் வயதைவிட இரு மடங்காக இருக்கும்?
(1) 3 வருடங்கள் (2) 4 வருடங்கள் (3) 8 வருடங்கள்

● *கீழே ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட கருத்தைக் குறிக்கும் பழமொழியைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.*

13. வீண் செலவு செய்யினும் அக்கணக்கையும் அறிந்திருத்தல் நன்று.
1) விரலுக்குத் தக்கதுதான் வீக்கம் 2) பாத்திரமறிந்து பிச்சையிடு
3) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு (...............)

14. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
1) ஐயர் வருகிறவரை அமாவாசை காத்திருக்குமா?
2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
3) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு (...............)

● *கீழ்வரும் பாடல் பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.*

சேவல் கூவுட *காகம்* கரையும்
செக்கச் சிவந்த சூரியனும்
*ஏவல் புரிய* உலகை நோக்கி
*எழுந்து வருவான்* அதிகாலை

இப்பாடல் பகுதியில் கோடிடப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றினதும் கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

15. ஏவல் புரிய 1) புண்ணியம் செய்ய 2) கடமையைச் செய்ய 3) ஏவிவிரட்ட (...........)


16. எழுந்து வருபவன் 1) சந்திரன் 2) ஆகாயம் 3) சூரியன் (..........)

17. கீழே தரப்பட்ட மூன்று படிமுறைகளின் கீழ் பூங்கா ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.


| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 2 ஆண்டுகள் |
| 2 | படிமுறை 1 இன் இரண்டு மடங்கு |
| 3 | படிமுறை 2 இன் அரை மடங்கு |

2005ஆம் ஆண்டில் பூங்கா அமைக்கத் தொடங்கப்பட்டது எனின், எந்த ஆண்டு அது அமைத்து முடிக்கப்பட்டிருக்கும்?
1) 2012 2) 2013 3) 2014

18. கீழே முதலில் தரப்பட்டுள்ள உரு கடதாசிக் கீற்றினை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கப் பயன்படுத்திய கடதாசிக் கீற்றினைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




● *பின்வரும் கோட்டுப்படங்களின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.*




19. பென்சில்கள் 3 இனதும் பேனைகள் 5 இனதும் விலை யாது?
1) ரூபா 100 2) ரூபா 110 3) ரூபா 124

20. பென்சில் 1 இனதும் பேனை 1 இனதும் விலை யாது?
1) ரூபா 20 2) ரூபா 26 3) ரூபா 32

● *கமலன் ஆண் பிள்ளை ஆவான். கமலனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் உள்ளனர்.*

21. கமலனிற்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?
1) 1 2) 2 3) 3

22. கமலனிற்கு எத்தனை சகோதரிகள் உள்ள்னர்?
1) 1 2) 2 3) 3

● *பின்வரும் பாடலை வாசிக்க. இதற்கேற்ப 27ஆம் 28ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.*

கரம்பு நிலத்தை ..........■.........
கண்டு நன்றாய் உழைத்தனன்
கரும்பும் நெல்லும் விளைந்திடும்
..........○...........மாற்றினன்


23. ■ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) குயவனும் 2) வேலைக்காரனும் 3) உழவனும்

24. ○ என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) சிற்பமாக 2) தண்ணீராக 3) கழனியாக


25. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்ட எழுத்து யாது?..................

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | அ | க | ம | ப | ச | க | அ |
| ப | ட | பி | ச | அ | வ | த | நி |

26. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்ட வடிவம் யாது?.....................




27. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன.




எழுத்து சி இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? ..............

28. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.




**BLACK** நிறத்திற்கு எதிரே இருக்கும் பக்கத்தின் நிறம் யாது? ..................

● *பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.*

29. பிள்ளைகள் பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும் என்பதற்கான காரணம் யாது?
1) பெற்றோர் பிள்ளைகளைவிட வயதில் மூத்தவர்கள் என்பதால்
2) பெற்றோர் சொற்படி நடக்காது போனால் தண்டனை கிடைக்கும் என்பதால்
3) பெற்றோர் பிள்ளைகளின் நன்மைக்காகவே எதையும் சொல்வார்கள் என்பதால்.

30. பாடசாலையில் நாம் தினமும் காலைச் சுகப்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்பதற்கான காரணம் யாது?
1) உற்சாகமும், உடல் ஆரோக்கியமும் பெறுவதற்காக
2)அதிபரின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக
3) மற்றப் பாடசாலைப் பிள்ளைகளும் சுகப்பயிற்சியில் ஈடுபடுகின்றனர் என்பதற்காக.

● *பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள மூன்று வாக்கியங்களுள் திருத்தமான வாக்கியம் எது எனத் தெரிந்து அதன் கீழ்க்கீறிடுக.*

31. 1. நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் பரிமாறப்பட, செய்திகள் விரைவாக உதவுகின்றன.
2. நவீன செய்திகள் பரிமாறப்பட, தொலைத் தொடர்பு சாதனங்கள் விரைவாக உதவுகின்றன.
3. செய்திகள் விரைவாகப் பரிமாறப்பட, நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் உதவுகின்றன.

32. 1. எந்த முயற்சி செய்வோரின் காரியமும் அயராது நிச்சயம் வெற்றி பெறும்.
2. அயராது முயற்சி செய்வோரின் எந்தக் காரியமும் நிச்சயம் வெற்றி பெறும்.
3. நிச்சயம் வெற்றி பெறும் எந்த அயராது முயற்சி செய்வோரின் காரியமும்.


● *பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் சொற்கள் ஆக்கப்பட்டுள்ள விதத்திற்கு ஏற்ப வெற்றிடமாயுள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.*


33. காரம் + பணம் = காரணம் அருமை + தவம் = .....................
1. [illegible] 2. அருதம் 3. அருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. திருமதி + வலம் = வருமதி பருவம் + உதவி = ....................
1. உருவம் 2. தவம் 3. விபரம்

● *பின்வரும் வினாக்களில் உள்ள உருக்களின் வெற்றிடங்களுக்கப் பொருத்தமான பகுதியைத் தெரிந்து கீறிடுக.*

35.


36.



● *அடைப்புக்குள் காணப்படும் எழுத்துக்களையும் இலக்கங்களையும் அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கீறிடுக.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | 1 | க | இ | அ | து |
| இ | அ | 2 | அ | 9 | க |
| க | இ | 8 | 3 | இ | க |
| அ | 7 | அ | அ | 4 | ப |
| 6 | ப | ப | ப | அ | 5 |

37. அடைப்புக்குள் காணப்படும் எழுத்துக்களின் எண்ணிக்கை இலக்கங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும்,
1) குறைந்தது 2)அதிகமானது 3) சமனானது

38. இங்கு சமஎண்ணிக்கையில் காணப்படும் எழுத்துக்கள் அடங்கிய விடை,
1) க, இ, ப 2) க, அ, இ 3) ப, க, அ

● *பின்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கீறிடுக.*




சிறுவன் ஒருவன் மைதானமொன்றில் நடந்து சென்ற பாதையை அருகே உள்ள படம் காட்டுகின்றது. சிறுவன் நடக்க ஆரம்பித்த இடம் A எழுத்தாலும் நடந்து முடிந்த இடம் B எழுத்தாலும் காட்டப்பட்டுள்ளன.

39. சிறுவன் எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பியிருப்பான்?
1) 5 2) 6 3) 7

40. சிறுவன் வடக்குத் திசையை நோக்கி எத்தனை முறை நடந்தான்?
1) 3 2) 5 3) 7

## வினாத்தாள் - II 1 மணி 45 நிமிடம்

01] பின்வரும் பாடல்களைப்படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

எல்லை அறியாப் பெருங்கடலே! நீதான்
இரவும் உறங்காயோ? கடலே!
அல்லும் பகலும் அலைகடலே! - உனக்கு
அலுப்பும் இலையோ? கருங்கடலே!

மலையை வயிற்றடக்கும் கடலே! - எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! - சிப்பி
விளையாடற்குதவும் கடலே!

1) கடல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ....................
2) மலை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ....................
3) பாடலில் வந்துள்ள முன்னிலை ஒருமைப் பெயர்ச் சொல்லை எழுதுக ....................
4) உனக்கு என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. ....................
5) பாடலில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக ....................
6) எண்ணில் என்பதாற் கருதப்படுவது யாது? ....................
7) கடலில் உலவுவன எவை? ....................
8) விளையாடுவதற்காக, கடல் எதனைத் தந்து உதவுகிறது? ....................
9) விலைகொள் என்பதாற் கருதப்படுவது யாது? ....................
10) முத்தளிக்கும் என்பதைப் பிரித்து எழுதுக ....................

02] *கீழுள்ள வாக்கியங்களை இணைத்து எழுதுக.*
01. (அ) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.
(ஆ) மாணவர் வணக்கம் தெரிவித்தனர்.
....................
02. (அ) அவன் மேசை மீது ஏறி நின்றான்.
(ஆ) சுவரிலே ஆணி அறைந்தான்.
....................

03] கீழுள்ள சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிந்து கீறிடுக.
01. துன்பம் வந்தால் அடுத்தடுத்து வரும்.
1) இலையும் பழுப்பும் எங்கும் உண்டு 2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் 3) பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்
02. அறிவற்றவர்களின் தொடர்பு துன்பத்தினைக் கொண்டு வரும்
1) கெடு குடி சொற் கேளாது 2) மூடருறவால் கேடு விளையும் 3) தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்

04] *பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.*
1) இலவுகாத்த கிளி போல ....................
2) வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல ....................

05] பின்வரும் தொடர்மொழிகளின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.
1) ஒன்று போல் இருக்கு வேறொன்று: ....................
2) கடவுள் நம்பிக்கை உடையவன் : ....................

06] பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.
1) Please be silent ....................
2) Please stand up ....................
3) May I come in? ....................

07] பின்வரும் சொற்களுக்குச் சமனான ஆங்கிலச் சொற்களை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.
1) நான்கு .................... 2) சிவப்பு ....................
3) மரங்கள் .................... 4) ஆசிரியர் ....................

08] பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.
1) **Ears** .................... 2) **Pineapple** ....................
3) **Sea** .................... 4) **Parrot** ....................

09] பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக

01.

ஒ(B)ப மொணவத பொ(B)ண்ணே?
....................

02.
மம கிரி பொ(B)ணவா
....................


10] *பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.*
விலங்குகள் மூலம் பரவிப் பெருகும் வித்துக்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.
(துத்திரி, ஆடையொட்டி, மரமுந்திரிகை, புலிநகம்)

i)  ....................
ii)  ....................

காற்றின் மூலம் பரவிப் பெருகும் வித்துக்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
(அச்சு, வேங்கை, எண்ணெய், மகோகனி)

iii)  ....................
iv)  ....................

கனி உலர்ந்து பின் வெடிப்பதன் மூலம் வீசப்பட்டுப் பரம்பலடையும் வித்துக்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
(றப்பர், பொன்னாவரை, காசித்தும்பை, வெண்டை)

v)  ....................
vi)  ....................

11] *சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.*
1) கலாநிதி டி.பி ஜாயாவின் உருவப்படம் எது?


2) அருகே காணப்படும் வித்து எதன் மூலம் பரம்பலடையும் இயைபாக்கத்தைப் பெற்றது?

1) காற்றின் மூலம் 2) நீரின் மூலம் 3) விலங்குகள் மூலம்

3) பின்வருவனவற்றுள் எது சீகிரிய ஓவியம் ஆகும்?



4) பலகையில் குழி குடைய உதவும் உபகரணம் எது?


5) பின்வருவனவற்றுள் வெப்பத்தட்டு எது?


6) மன்னன் தாதுசேனனால் கட்டப்பட்ட குளம் எது?
1) கலாவாவி 2) திஸாவாவி 3) மின்னேரியாக் குளம்
7) ஊதா நிறத்தைப் பெறக் கலக்க வேண்டிய நிறங்கள் எவை?
1) சிவப்பு + நீலம் 2) சிவப்பு + மஞ்சள் 3) நீலம் +மஞ்சள்
8) பின்வருவனவற்றுள் முலையூட்டி அல்லாதது எது?
1) பாம்பு 2) குரங்கு 3) வெளவால்
9) மரச் செதுக்கு வேலைகளைக் கொண்ட கலைத்துவப் படைப்பு காணப்படுவது எங்கு?
1) கிதுல்பவ்வ 2) ஹிந்தகல 3) எம்பக்க
10) இரத்தினபுரிக்குச் சப்ரகமுவ என்ற பெயர் வரக் காரணம் யாது?
1) இரத்தினபுரி சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்திருப்பதால்.
2) அங்கு ஆதிக் குடிகள் காணப்பட்டமையினால்
3) அங்கு சிங்கள மக்கள் அதிகம் வாழ்வதால்
11) பின்வரும் எந்த விளையாட்டை விளையாடக் குறைந்தளவு நிலப்பரப்புத் தேவையாகும்?
1) எல்லே 2) கரப்பந்து 3) கிரிக்கட்
12) நிலத்தில் படர்ந்து வளரும் கொடி எது?
1) வெற்றிலை 2) கொடித்தோடை 3) வற்றாளை
13) மீன்கள் சுவாசிக்கும் அங்கம் எது?
1) மூக்கு 2) தோல் 3) பூ 4) வாய்
14) இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படாத அம்சம் எது?
1) தருமச்சக்கரம 2) நாகமரம் 3) மலரிதழ் 4) சிங்கம்
15) பின்வரும் எதன் குறைபாட்டினால் கண்டமாலை நோய் ஏற்படுகிறது?
1) சோடியம் 2) அயடீன் 3) கல்சியம் 4) பொஸ்பரசு
16) கிளைகள் அற்ற தாவரம் எது?
1) பலா 2) கித்துள் 3) ஆமணக்கு 4) நாகமரம்
17) உணவு உண்ணும் போது நாம் செய்யக்கூடாதது எது?
1) இடையிடையே நீர் அருந்துதல் 2) உணவு நிலத்தில் சிந்தாமல் உண்ணுதல் 3) வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல் 4) போதுமான அளவு உண்ணுதல்
18) பிரதான போக்குவரத்துப் பாதையில் காணப்படும் ஒளிவிளக்குச் சமிக்ஞையில் செம்மஞ்சள் நிறவிளக்கினால் உணர்த்தப்படுவது எது?
1) வாகனத்தை மெதுவாகச் செலுத்து 2) வாகனத்தை நிறுத்து 3) வாகனத்தை செலுத்து 4) வாகனத்தைச் செலுத்த ஆயத்தமாயிரு
19) பின்வருவனவற்றில் பெரிய பூ எது?
1) செவ்வரத்தை 2) மல்லிகை 3) எக்ஸ்சோறா 4) நித்தியகல்யாணி
20) தாவரங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி எது?
1) குளவி 2) தும்பி 3) தேனீ 4) வெட்டுக்கிளி

12] பின்வரும் படங்களை அவதானித்து அவை எவ்விளையாட்டுக்களுடன் தொடர்புடையன என எழுதுக.
i  ....................
ii  ....................

13] பின்வரும் தாவரங்களின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.
(ஆடாதோடை, ஆனைத்தகரை, கற்றாளை, முடிதும்பை)
1)  ....................
2)  ....................


14] பின்வரும் அலகுகள் எந்தப் பறவையினுடையது என்பதை எழுதுக.

1) .................... 2) .................... 3) .................... 4) ....................

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**15]** *பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.*




புத்தக வியாபாரி ஒருவர் குறிப்பிட்ட தினம் ஒன்றில் விற்ற புத்தக வகைகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் அருகே தரப்பட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

1) விற்கப்பட்ட சிறுகதைப் புத்தகங்கள் எத்தனை? ..........................................


2) குறிப்பிட்ட தினத்தில் 95 சிறுவர் கதைப் புத்தகங்கள் கடையில் இருந்தன. விற்பனைக்குப் பின்னர் கடையில் மீதியாக இருந்த சிறுவர்கதைப் புத்தகங்கள் எத்தனை? ..........................................

3) விற்கப்பட்ட கவிதைப் புத்தகங்களினதும் சிறுகதைப் புத்தகங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

4) நாவல் புத்தகம் ஒன்றின் விலை ரூபா 120 எனின் குறிப்பிட்ட தினத்தில் நாவல் புத்தக விற்பனை மூலம் கிடைத்த மொத்தப் பணம் எவ்வளவு?..............................

5) விற்கப்பட்ட கவிதைப் புத்தகங்களின் எண்ணிக்கை விற்கப்பட்ட வேறு இரண்டு வகைப் புத்தகங்களின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும். அந்த இரண்டு புத்தகங்களும் எவை?..............................

**16]** *பொருத்தமான விடையை எழுதுக*




1) அருகிலுள்ள உருவில் எத்தனை செவ்வகங்களை இனங் காணலாம்? ..............................

2) ரூபன் ரூபா 178 பெறுமானமுள்ள பொருட்களை வாங்கினான். வியாபாரியிடம் ரூபா 100 தாள் ஒன்றினையும், ரூபா 50 தாள்கள் இரண்டினையும் கொடுத்தான். அவனுக்கு கிடைக்கவேண்டிய மீதிப்பணம் யாது? ..............................

3) செங்கல் அடுக்குபவர் ஒருவர் நாள் ஒன்றிற்கு 1200 செங்கற்களை அடுக்குகிறார். அவர் ஒவ்வொரு 100 கற்களை அடுக்கும் போது ஏறத்தாழ 4 செங்கற்களை உடைக்கிறார். அவர் ஒரு நாளில் எத்தனை செங்கற்களை உடைக்கிறார்? ..............................

4) ஒரு பாடசாலை 310 மாணவர்களைச் சுற்றுலா ஒன்றிற்கு அழைத்துச் சென்றது. ஒவ்வொரு பஸ் வண்டியும் 50 மாணவர்களை மட்டும் கொள்ளும். அம்மாணவர்களை ஏற்றுவதற்கு எத்தனை பஸ் வண்டிகள் தேவை?..............................

5) ராணியின் பாட்டி 1939 இல் பிறந்தார். 1999 இல் ராணியின் பாட்டியின் வயது ராணியின் வயதின் 5 மடங்காக இருந்தது. ராணி எப்போது பிறந்தாள்? ..............................



6) படத்தில் ஒரு கட்டத்தின் நீளம் 1 cm அகலம் 1 cm ஆகும். உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது? ..............................

7) 1kg பருப்பின் விலை ரூபா 60 எனின், 400g பருப்பின் விலை யாது? ..............................

8) நீர்த் தாங்கி ஒன்று 20 லீற்றர் நீரைக் கொள்ளக் கூடியது. அதிலுள்ள துவாரத்தினால் 5 லீற்றர் 350 ml நீர் ஒழுகிவிட்டது. இப்போது நீர்த்தாங்கியிலுள்ள நீரின் அளவு யாது? ..............................

9) 250 g கடலை ரூபா 18 ஆயின், 2 kg கடலையின் விலை யாது? ..............................

10) சிறிய மெழுகுவர்த்தி ஒன்றின் விலை ரூபா 3 ஆகும். பெரிய மெழுகுவரத்தி ஒன்றின் விலை ரூபா 4.50 ஆகும். 15 சிறிய மெழுகுவர்த்திகளை வாங்கும் பணத்திற்கு எத்தனை பெரிய மெழுகுவர்த்திகளை வாங்க முடியும்? ..............................

11) ஒரு மாணவனுக்கு 5 அப்பியாசக் கொப்பிகள் வீதம், 535 கொப்பிகளை எத்தனை மாணவர்களுக்குக் கொடுக்க முடியும்? ..............................

12) ஒன்று ரூபா 2.50 வீதம் 30 பென்சில்களை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ..............................

13) கூட்டுக: $\frac{1}{2} + \frac{2}{7} =$ ..................

14) 1 லீற்றர் 500 ml அளவுடைய போத்தல் ஒன்றை முற்றாக நீரினால் நிரப்ப, 125 ml அளவுடைய சிறிய பாத்திரம் ஒன்றினால் எத்தனை முறை நீரூற்ற வேண்டும்? ..............................

15) மு.ப 11.30 இற்கு ஆரம்பித்த பரீட்சை ஒன்று 45 நிமிடங்கள் வரை நடைபெற்றது. எனின், பரீட்சை முடிவடைந்த நேரம் யாது?..............................

16) பாடசாலைக்குத் தெற்கே 150m தொலைவில் கோயில் இருக்கிறது. கோயிலுக்கு மேற்கே 150m தொலைவில் சந்தை இருக்கிறது. எனின், சந்தைக்கு என்ன திசையில் பாடசாலை இருக்கிறது? ..............................

17) சாந்தன் 500m தூரத்தை நடந்து செல்ல 15 நிமிடங்கள் எடுப்பான் எனின், அவன், 1 மணித்தியாலத்தில் நடந்து செல்லக் கூடிய மொத்தத் தூரம் எவ்வளவு? ..............................

18) அம்மா 2kg 800g உருளைக்கிழங்கை வாங்கி வைத்திருந்தாள். அதில் முதல் நாள் 350g உம் இரண்டாம் நாள் 1kg 500g உம் சமையலுக்காகப் பயன் படுத்தப்பட்டன. எனின், எஞ்சிய உருளைக்கிழங்கின் நிறை யாது? ..............................

**17]** *பாடசாலை விளையாட்டுப் போட்டி ஓட்ட நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற அமலன், தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றான். அவனது திறமையைப் பாராட்டும் முகமாக பாடசாலையில் விழா எடுத்துக் கொண்டாடினார்கள். ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் அமலனுக்கு மேடையில் பெரியோர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது..........*

நீர்தான் அமலன் எனின், இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக.

1) ______________________________

2) ______________________________

3) ______________________________

4) ______________________________

5) ______________________________

6) ______________________________


**VACANCY**

*Post* : Computer Programmer (c, c++, Java, V.B)

*Salary:* Negotiable

விளம்பர இலக்கம் 2930
மே/ப. உதயன்



## இளவாலை புனித யூதாததேயு ஆலய முகப்பு திறப்பு விழா

**29.10.2006**



*அன்புடையீர்!*

*புதிதாக அமைக்கப்பட்ட இளவாலை புனித யூதாததேயு ஆலய முகப்பு இன்று [29.10.2006] ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து, திறந்து வைக்கப்பட்டு, நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்து புனிதரின்அருளைப்பெற அன்புடன் . அழைக்கின்றோம்.*

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

(54765)



## வீட்டுக்கிருத்திய அழைப்பு

17.09.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு



அமரர்

**லோகநாதன் செல்வக்குமாரன்**

*தோற்றம்* *14.10.1980* — *மறைவு* *17.09.2006*

*அவர்களின் வீட்டுக்கிருந்தியம் 31.10.2006 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து, ஆத்ம சாந்திப்பிரார்த்தனை யிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

பாடசாலை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

(54758)



## நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு — 18 ஆம் மாதம்



| அமரர் முத்தையா இராசரத்தினம் | | அமரர் இராசரத்தினம் நாகேஸ்வரி |
|---|---|---|
| 27.04.1925 - | மலர்வு | - 07.04.1940 |
| 09.11.2005 - | உதிர்வு | - 31.05.2005 |

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
பாரினிலே எமைப் பெற்று வாழவைத்த தெய்வங்களே!
பாதியிலே எமைவிட்டுச் சென்றதேன்?
ஆண்டொன்று சென்றாலும் நீங்காது உங்கள் நினைவுகள்.

*இ.சிறிகாமராஜ்*
*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

உங்கள் நினைவில் வாழும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

(54759)


## பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகரும் முன்னாள் அதிபருமான ஜெயரத்தினத்தின் நினைவுதினமும் கனிஷ்ட பிரிவின் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி சி.அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை விரிவுரையாளர் திருமதி சாந்தரூபி புவனேந்திரராசா நிகழ்த்தவுள்ளார்.

(1-203)

## நீர்வேலி தெற்கு விவசாயவீதி புனரமைப்பு

பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாது இருந்த நீர்வேலி தெற்கு விவசாய வீதியில் இருந்து கோப்பாய் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வீதி கிரவல் மக்கி போட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீதி பல வருடமாகப் புனரமைப்புச் செய்யப்படாது இருந்தமையால் மக்கள் இவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்ய முடியாது கஷ்டமடைந்தனர்.

தற்போது இவ் வீதி துரிதகதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இவ் வீதி புனரமைக்கப்படுவதால் இப்பிரதேச மக்கள், விவசாயிகள் ஆகியோர் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-17)

## தென்மராட்சியில் மதிப்பீட்டுப்பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாட மதிப்பீட்டுப் பரீட்சை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பாடத்திட்டத்தில் உள்ள ஒலி, ஒளி ஆகிய பாட அலகில் இம் மதிப்பீட்டுப் பரீட்சைகள் நடத்தப்படும்.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இன்று ஞாயிற்றுக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202)

## மானிப்பாயில் தேங்காய்த் திருட்டு

மானிப்பாய் பிரதேசத்தில் தேங்காய்த் திருட்டு அதிகரித்துள்ளது.

திருடர்கள் தேங்காய்களைப் பிடுங்கி வாயினால் கவ்வியபடி கீழே இறங்குகின்றனர் எனக் கூறப்படுகிறது. அதனால் சத்தம் சந்தடியின்றி திருட்டு இடம் பெறுகிறது.

கடந்த வியாழக் கிழமை உச்சியோடைக் கிராமத்தில் இந்தப்பாணியில் சில வீடுகளிலும் தேங்காய்திருட்டுப் போய்யுள்ளன.

(90-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
இராமநாதன் நுண்கலைக் கழகம்

## நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்/கலையும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2006/2007

1) நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்/கலையும் வடிவமைப்பும்) பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் கீழ்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து 15.11.2006ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2) கற்கை நெறிக் காலம் - நான்கு வருடங்கள்

3) அனுமதிக்கான ஆகக் குறைந்த தகுதியும் தகைமைகளும்

2006ஆம் ஆண்டு ஜூன் மாத க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறத் தகுதி பெற்றுள்ளதோடு

*அ) நுண்கலைமாணி - சங்கீதம் கற்கைநெறி விண்ணப்பதாரிகள் கர்நாடக சங்கீதத்தில் திறமைச் சித்தி (C)இற்கு குறையாத தரமும்.*

*ஆ) நுண்கலைமாணி - நடனம் (பரதநாட்டியம்) கற்கைநெறி விண்ணப்பதாரிகள் பரதநாட்டியத்தில் திறமைச் சித்தி (C)இற்கு குறையாத தரமும்.*

*இ) நுண்கலைமாணி - கலையும் வடிவமைப்பும் கற்கைநெறி விண்ணப்பதாரிகள் சித்திரக் கலையில் திறமைச் சித்தி (C)இற்கு குறையாத தரமும்.*

பெற்றிருப்பதோடு ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தி (S) இற்கு குறையாத தரமும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

4) அறிவுறுத்தல்கள்

★ மேற்படி கற்கைநெறிகளில் சங்கீதம், நடனம் ஆகிய கற்கைநெறிகளுக்கான தெரிவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியன உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் நடைபெறும்.

★ கலையும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும்.

★ 2006ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்ற Zபுள்ளி மற்றும் சங்கீதம்/நடனம்/சித்திரக்கலை ஆகியவற்றில் பெற்ற தரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக மூதவை ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் பற்றி எடுக்கும் தீர்மானத்திற்கு அமையவே விண்ணப்பதாரிகள் இத்தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

★ விண்ணப்பதாரிகள் அனைவரும் பாடசாலை அதிபரால் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பத்திரத்தின் (Zபெறுபேறு, பொதுச் சாதாரண பரீட்சையின் புள்ளிகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் தகுதி ஆகியன உள்ளடக்கிய) பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளில் ஏதாவதொன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டு, பதிவினை மேற்கொண்ட மாணவரொருவர் இனிவரும் ஆண்டுகளிலான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் (அதாவது 2006ஆம் ஆண்டின் பின்னர்) பல்கலைக்கழக அனுமதிகளுக்காக எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

5) விண்ணப்பப் படிவம் பெறும் முறை

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளையிலோ ரூபா 150 செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150 பெறுமதியான காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப்பட்ட 23x10 செ.மீ. அளவுள்ள கடித உறையை *உதவிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளிமாவட்ட விண்ணப்பதாரிகள் தபாற் போக்குவரத்து தாமதத்தை தவிர்க்க மாதிரி விண்ணப்பத்தை jfn.ac.lk என்ற எமது இணையத்தளத்திலிருந்து பிரதிசெய்து பெற்று நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150 பெறுமதியான காசுக்கட்டளை அனுப்பலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 15.11.2006ஆம் திகதிக்குமுன் கையளித்தல் வேண்டும்.

6) விண்ணப்பங்களை அனுப்ப/ஒப்படைக்கவேண்டிய முகவரி

| | | |
|---|---|---|
| உதவிப் பதிவாளர், | | சிரேஷ்ட உதவிப் பதிவாளர், |
| பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, | அல்லது | பரீட்சைகளும் மாணவர் சேவைகளும் கிளை, |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், | | வவுனியா வளாகம், |
| யாழ்ப்பாணம். | | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா. |

7) மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுதிகதிக்குள் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.
27.10.2006 (சி/51232)

### வடமராட்சி மாணவர்களுக்கு அடையாள அட்டைகள்

வடமராட்சிகல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அவர்களை அடையாளப்படுத்தும் வகையில் அடையாள அட்டைகளை பாடசாலை அதிபர்கள் வழங்கி வருகின்றனர்.

அதிபரின் கையொப்பத்துடன், மாணவர்களின் புகைப் படங்களுடன் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(202-182)

### விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

புலோலி கமநல சேவை நிலையப் பகுதிக்குள் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கை விவசாயிகளுக்கு இரண்டாம் கட்டமாக மண்எண்ணெய்யை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோக அட்டைகளுக்கு இரண்டாம் கட்ட மண்எண்ணெய்யை பெற்றுக்கொடுக்க அவ்வப்பகுதி விவசாயிகள் சம்மேளனங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

(202)


## உடனடி வேலை வாய்ப்பு

### டோகா கட்டார், டுபாய்

துப்பரவுத் தொழிலாளர்கள் - 700 பேர்
(Cleaning Laborer)
(விமான நிலையம், சுப்பமார்க்கட், ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில்)
★ முன்னனுபவம், அனுபவம் தேவையில்லை
★ ஒரு மாதத்தில் பயணம்

### ஐரோப்பிய நாடுகளுக்கான விசா ஒழுங்குகள்

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், லண்டன், இத்தாலி நாடுகளுக்கு Sponsor மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

## RAINBOW TRAVELS

32, 1/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 3237
(ராஜா கிறீம் கவுஸுக்கு அருகில் அபிநயா நகை மாடத்திற்கு மேல்மாடியில்)
(44671)


## முதலாம் ஆண்டு இதயம் ஆறாத நினைவுகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 31 | 07 |
| 07 | 11 |
| 1967 | 2005 |

### திருமதி வசந்தன் உமாதேவிகௌரி

திதி: ஸப்தமி (29.10.2006)

அம்மா! நூற்றாண்டு வாழ்வீர்கள் என நினைத்து சந்தோஷத்தில் வாழ்ந்திருக்கையில் எம் இதயத்தினை கண்ணாடிபோல் உடைத்து எம்மை விட்டு எங்கு சென்றீர் அம்மா!

உங்கள் ஆத்மா ஈடேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*என்றும் ஆறாத்துயரில் வாழும்:*
*வசந்தன் (கணவன்), ஜதீசன் (மகன்), தெய்வநாயகி (தாய்).*

*பூதர்மடத்தடி, கோப்பாய் வடக்கு.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 09 |
| 03 | 11 |
| 1933 | 2005 |

### அமரர் ஆறுமுகம் கந்தசாமி

*(ஆலடி, சத்திரந்தை, களபூமி, காரைநகர்)*

திதி: 09.10.2006

அன்புத் தெய்வமே, குடும்பத் தலைவனே!
ஆண்டுகள் ஒன்று ஆனதப்பா!
அன்பையும் பாசத்தையும் பொழிந்து
எங்களை அன்போடு அரவணைத்து
அறிவுரைகள் தந்தீரே - அப்பா,
என்றழைக்க அருகில் இல்லை
அன்பான அப்பாவே எப்போது
உங்கள் திருமுகம் காண்போமோ?

தங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல காரைநகர் ஈழத்துச் சிதம்பர இறைவனின் பாத மலர்களைப் பணிந்து இறைஞ்சுகிறோம்.

*பாலகிருஷ்ணன் (மகன்),*
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*ஷருபன், விதுஷன் (பேரன்மார்),*
*ஜெயசக்தி, திவ்வியா, லக்ஷிகா, லக்ஷனா (பேர்த்திமார்).*

26, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
தொ.பே. 0112505107
(54699)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த-ரணில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஒக்.29

ஸ்ரீல.சு.க. - ஐ.தே.க. இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்துவதைக் கண்காணிக்கும் குழுவொன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கண்காணிக்க விரைவில் குழுவொன்றை அமைப்பது என்று இப்பேச்சுகளின் போது தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு தெரிவித்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட ஆறு விடயங்களில் சமாதான முன்னெடுப்புக்களுடன் தொடர்புடைய நான்கு விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவும் இரு தலைவர்களும் தீர்மானித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல்படுத்துவதைக் கண்காணிக்க குழு அமைக்கப்படும். இரு தரப்பிலிருந்தும் தலா மூவர் அல்லது ஐவர் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐ.தே.க.கட்சித் தலைவர் ரணில் விக்கிமசிங்கவுக்கும் இடையிலான மற்றொரு சந்திப்பு ஜெனிவா சென்றுள்ள அரசகுழு நாடு திரும்பியதும் இடம்பெறும். (ஐ)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ நயினாதீவு மகாவித்தியாலயத்தில் இருந்து க.பொ.த. (உ /த) 2006 பரீட்சையில் தோற்றி மூன்று பாடங்களுக்கும் A தரச் சித்தி பெற்ற எமது கனிஷ்ட புத்திரி

**செல்வி பத்மநாதன் சுவர்ணலதா**

அவர்களை உரிய முறையில் வழிப்படுத்திய அதிபருக்கும் கற்பித்த சகல ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*7 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
(54700)
*திரு. திருமதி பத்மநாதன்*
*(பெற்றோர்).*

## WANTED SCIENCE GRADUATES
## ST.PATRICK'S COLLEGE, JAFFNA

Applications are called for Science Graduates to teach Science in English Medium for the G.C.E (O/L) Classes.

Apply giving particulars before the 3rd of November 2006

-RECTOR.

(15123)

## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
06
04
1922



அரன் மடியில்
29
09
2006

**திருமதி பாலசிங்கம் சின்னம்மா**

அன்பின் அருமருந்தே! ஆருயிர் அம்மாவே!
பண்பில் உனை நிகர்க்கும் பாவை காண்போமோ!
மண்ணில் எமை மலரவைத்தாய்!
விண்ணுறையும் மலரானாய்!
எண்ணியுமை ஏங்குகிறோம்! ஏதிலிகளானோம்!
கண்ணிலுமைத் தாங்குகிறோம்! – தினம்
காலையிலே வணங்குகிறோம்!

சிலும்பிலாட்டி, ஏழாலை மேற்கு.
சுன்னாகம்.

என்றும் நினைவால் தயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு**
02 - 05 - 1930



**உதிர்வு**
01 - 10 - 2006

**பெரியதம்பி கணேஸ்**

(இளைப்பாறிய Foreman,சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

*எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய வைபவம் நாளை [30.10.2006] திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*வன்னியசிங்கம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
(54694)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## நீரிழிவு DIABETES

* சிறுகுறிஞ்சாப் பவுடர் Gymnema Powder
* 2 டி கோலா 2 D cola
தலைமயிர் நரைத்தல்/உதிர்தல் Hair Greying / falling
* பிபிஜி கெயார் ஒயில் BBG Hair Oil
திராட்சை Grapes
* திராட்சை வைன் Grape wine
* திராட்சை ரசம் Grape juice
வினாகிரி Vineger
* இயற்கை அரிசி வினாகிரி Natural rice vineger
அச்சா மென்பானங்கள் Achcha Soft drinks

**BIO TEC ORIENT**
131 / 2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(54372)

**மனிதநேய அடிப்படையில் ஆஸ்திரேலியா, கனேடிய அரசினால் வழங்கப்படுகின்ற நிரந்தர வதிவிடத்திற்கான விசா (VISA) விண்ணபப்படிவம் விற்பனையாகின்றது உடன் பெற்றுக் கொள்ளலாம்.**

* **பூபாலசிங்கம் புத்தகநிலையம்**- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* **கணேசன் கொமினிகேஷன்**- கொக்குவில் சந்தி.
* **பெஸ்ட் வன் Best one கொமினிகேஷன்**- ஆனைக்கோட்டைச் சந்தி.
* **சிறிசரவணாஸ் களஞ்சியம்** 610, பருத்தித்துறை வீதி, நல்லூர் சோயில் முன்பாக.
* **DTS கொமினிகேஷன்** கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி அருகில்
* **அர்சயன் கொமினிகேஷன்**- பொன்னையா லேன் ஆறுகால் மடம்
* **தயாளினி வீடியோ சென்ரர்** - பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில்.
* **நாயகபாலன் புத்தகநிலையம்** - மானிப்பாய் வீதி, மானிப்பாய்.
* **மருதம் கொமினிகேஷன்** - நெல்லியடி.
* **விநாயகர் கொமினிகேஷன்** சித்தன்கேணி சந்தி.

(54695)


## இரண்டாம் தவணைப்பரீட்சை

தென்மராட்சி,ஒக்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை அந்தந்த பரீட்சை இணைப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (202)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.29

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் அதிசிறப்பு சித்தி பெற்ற 7 மாணவர்கள் சாவச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

சாவச்சேரி இந்துக் கல்லூரியில் கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் ஏழு மாணவர்கள் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்டத்தின் வலயத் தலைவர் லயன் மு.பத்மநாதன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (202)


## பாக்யா இசைப் பயிலகம்

*மணியர் பதி வீதி, கொக்குவில் மேற்கு.*

இசை , இசை வாத்திய வகுப்புகள் நடைபெறுகின்றன, பழக விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும்.

★ மிருதங்கம் ★ ஓகன்
★ புல்லாங்குழல் ★ வயலின்
★ வாய்ப்பாட்டும் பண்ணிசையும்

க.பொ.த (உ /த)சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன.

பாக்யா காகிதாதிகள், 121, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

(54606)

இருவாரத்தில் பயணம்

சிங்கப்பூர், மலேசியாவில்
**வேலை வாய்ப்புடன் கூடிய கற்கை நெறி**



**Hotel & Hospitality Management**
(12 months ) Allowance/Month (50,000 - 80,000)

**Information Technology**
Diploma Advanced Diploma BSc Hons.
Computer Net Working / Science / Engineering

**Management . BBA, MBA**
Business Administration Humans resource Management
Business & Marketing, Engineering Business Management

CIMA, ACCA, CIM (Work & Study)

Entry requirements : G.C.E O/L

மேற்கூறப்பட்ட கற்கை நெறிகளை முடித்தவுடன் மேற்படிப்பிற்கு வேலைவாய்ப்புடன் Australia, UK & USA போன்ற நாடுகளுக்கு Visa எடுத்துக்கொடுக்கப்படும்

Student Loan Can Be Arranged

**VOICEKET**

No.50, 1st floor, Galle Road, "Colombo Plaza" Colombo - 06.

**0777-315554, 0777-307890**

S.K.Ad's & Prints


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் விய வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (01.11.2006) புதன்கிழமை காலை 10 மணிமுதல் 11.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது ஏக புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **இராசசுரேந்திரன்** | **சுபாஸ்சினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருளால் தெகிவளை வெங்கடேஸ்வர மகா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

திரு.திருமதி. இராசேந்திரன்
'திருப்பரங்குன்றம்'
சன்னதி வீதி, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-077 6660253, 0112599239, 0776852691
சகோதரரர்கள்:-இராசநரேந்திரன் (சிலிங்கோ)
இராசநவேந்திரன் (நவீன் செரமிக்)

திரு.திருமதி. சொல்வேந்தன்
சுதர்சன் (சகோதரன்) கனடா
77, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0777 252152
011 4614993

(பி 51228)


## VNC கொங்கிறீற் கற்கள்

| கல் அறுப்பதற்கான கலவை அளவு | தூண் அறுப்பதற்கான கலவை அளவு |
|---|---|
| 1 பைக்கெற் சிமெந்து, நீர் | 1 பைக்கெற் சிமெந்து, கம்பி வகைகள் |
| 1 கடகம் கருங்கல் தூள் | 2 கடகம் கருங்கல் தூள், நீர் |
| 4 கடகம் மண் | 2 கடகம் மண் |
| 8 கடகம் 1½"சல்லிக்கல் | 3 கடகம் 1½"சல்லிக்கல் or 1" சல்லிக்கல் |
| 5 கடகம் ¾" சல்லிக்கல் or $^{5}/_{8}$ நூல் சல்லிக்கல் | 4 கடகம் $^{5}/_{8}$ நூல் சல்லிக்கல் |
| மொத்தம் 18 கடகம் 55 - 60 கல் | மொத்தம் 11 கடகம் |
| 1 அடி நீள 4" அகல கல் ஒன்றின் நிறை 10 kg | தூண்களுக்குள் ஒற்றைக் கம்பி புகுத்துதல் |
| விலை 39/= | தவிர்க்கப்படுகிறது. |

ஒரே நேரத்தில் 50 இற்கும் மேற்பட்ட இரும்பு அச்சுக்களில் தரமான முறையில் விகிதாசாரத்திற்கு அமைவாக மண்ணின் விகிதத்தை குறைத்து சல்லிக் கற்களின் விகிதத்தையும் நீரின் விகிதத்தையும் கூட்டி 45 நிமிடத்திற்குள் கலவைகள் கொங்கிறீற் பொருள்களாக சமதரைத் தொட்டிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது. காலை 6.30 - 12.30 மணி வரை நேரடியாகப் பார்வையிடலாம். குறிப்பு: *நாம் கட்டட நிர்மாண வல்லுநர்களினால் சிபார்சு செய்யப்பட்ட வரன்முறைகளுக்கமைய சிமெந்து கற்களையும் தூண்களையும் உற்பத்தி செய்து வழங்குகின்றோம்.*

***We manufacture concrete blocks and pillars in accordance to the recommended specifications of construction specialists***

எமது கொங்கிறீற் பொருள்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய இடங்களும், ரெலிபோன் நம்பரும்

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ரஞ்சன் கட்டடப் பொருள்கள்விற்பனை நிலையம், துவாரகன் ஹாட்வெயார்- ஸ்ரேசன் றோட், சிவன் கோயிலுக்கு அருகில் சுன்னாகம், தொ.பே.: 021 4591833, த. மகேஸ்வரன்-சாயி மருந்துக்கடை, புகையிரத வீதி மல்லாகம், அ.இராசா-ஐக்கியசங்கம், சைவ வித்தியாசாலை முன்பாக , சுழிபுரம் மத்தி, சுழிபுரம் தொ.பே.: 060 221 3209, ஜெயம் பல்பொருள் வாணிபம், மணற்புலம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி தொ.பே.: 060 221 3236, தற்போது இந்த முகவர்கள் தவிர்ந்த எவரும் எமக்கு முகவர்கள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். தரமான கொங்கிறீற் பொருள்களை கொள்வனவு செய்வோர் மட்டுமே எம்மை நாடவும்.

**VNC, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் சதுக்கம், அளவெட்டி மத்தி, அளவெட்டி.**

(54602)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்கனவே இணங்கியவற்றை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் ஊடகவியலாளர் பட்டாளம் ஒன்று அங்கு திரண்டிருந்தது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் ஆரம்ப வைபவத்துக்குத் தலைமை வகித்தார். நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவரும் பிரசன்னமாக இருந்தார்.

பேச்சின் பங்காளிகளான அரசுக் குழுவினரும், புலிகளின் குழுவினரும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர்.

தொடக்கத்தில் பேச்சுகளை நடத்துவதற்கு இடமளித்த சுவிஸ் நாட்டு அரசின் சார்பில் பெடரல் துணைத் தலைவர் ஹெய்டி ரக்லியாவினி அம்மையார் (Heidi Tagliavini) உரையாற்றினார்.

**சுவிஸ் பிரதிநிதி உரை**

இலங்கை இனநெருக்கடிக்குத் தீர்வு காணும் பேச்சுகளை சுவிட்ஸர்லாந்தில் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் இணங்கியமை குறித்து சுவிஸ் அரசு மகிழ்ச்சி அடைகின்றது.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் நோர்வே நாடு தொடர்ந்து சளைக்காமல் பாடுபட்டு வருவது தொடர்பிலும் சுவிஸ் அரசு மகிழ்கின்றது. இலங்கைப் பிணக்குக்கு போர் வழிமுறையில் தீர்வு எட்டப்பட முடியாது. சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டும் இந்தப் பேச்சுகள் ஊடாக ஓர் அரசியல் தீர்வை எட்டவேண்டும். சுவிஸ் அரசு அதற்கு ஆதரவை வழங்கும் - என்று சுவிஸ் நாட்டின் பிரதிநிதி தனது உரையில் குறிப்பிட்டார்.

சுவிஸ் பிரதிநிதியின் வரவேற்பு உரையை அடுத்து அனுசரணைத் தரப்பின் சார்பில் பேச்சுகளுக்குத் தலைமை வகிக்கும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் விசேட உரையாற்றினார்.

**சொல்ஹெய்ம் உரை**

அவர் தனது உரையில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இலங்கையில் இரண்டு தரப்பினராலும் நடத்தப்படுகின்ற மனிதப் படுகொலைகள் - இராணுவ ரீதியான நடவடிக்கைகள் துர்பாக்கியகரமானவை. இதனை சர்வதேச சமூகம் ஒருபோதும் அனுமதிக்காது. அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காது ஏற்கனவே நடத்தப்பட்ட இத்தகைய பேச்சுகளின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை இரண்டு தரப்பினரும் இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. நீங்கள் எதைப்பற்றிப் பேசப் போகிறீர்கள் என்பதற்கு அப்பால் தமிழ் - சிங்கள - முஸ்லிம்களின் வாழ்வாதாரப் பிரச்சினையான மனிதஉரிமைகள்பற்றியும்ஒருஇனம்அல்லது சமூகம் அல்லது மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளை எவ்வாறு அனுமதிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைப் பேசுவதுதான் சிறப்பாக இருக்கும்.

புனர்வாழ்வு, மேம்பாடு, மீள் நிர்மாணத்துக்கான உதவிகளை இருதரப்புக்கும் வழங்க சர்வதேச சமூகம் தயாராக உள்ளது. இருதரப்பினரும் தங்கள் தரப்பின் அவலங்களைப் புரிந்துகொண்டு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்.

இந்தத் தீர்வுகளுக்கு இரு தரப்பும் ஒத்துழைப்பை வழங்காதுபோனால் இத்தகைய பேச்சுகள் துர்பாக்கியமானதாக அமையும்.

லெபனான் படுகொலைகள், பாலஸ்தீனமுரண்பாடுகள்தீர்க்கப்பட்டுதீர்வுகாணும் சூழல் இன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையேயான பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதில்தான் சர்வதேசசமூகம் விருப்பமும்ஆர்வமும்கொண்டிருக்கிறது.

ஒரு சமூகம் எதை எதிர்பார்க்கிறது - மற்றொரு சமூகம் அந்த எதிர்பார்ப்புக்கேற்ப எதனை வழங்கவுள்ளது என்கிற அடிப்படையில் இந்தப் பேச்சு அமையுமேயானால் அது அடுத்தகட்டப் பேச்சுக்கான சமிக்ஞையாக இருக்கும்.

இலங்கை இன நெருக்கடியில் சம்பந்தப்பட்ட தரப்புகள் கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் தமக்குள் இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தத் தவறியமையே இன்றைய மோசமான நிலைமைக்கு வழிவகுத்தது.

பெப்ரவரி ஜெனிவாப் பேச்சுகளுக்குப் பின்னர் மேலதிகமாக இரண்டு லட்சம் மக்கள் இடம்பெயரும் அளவுக்கு வன்செயல்கள் விரிவடைந்துள்ளன. இரண்டாயிரம் பேர்வரை உயிரிழந்திருக்கின்றனர். இராணுவ, பயங்கரவாத வன்செயல்கள் உட்பட இதரவன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்குதரப்புகள்தவறிவிட்டன.

இலங்கையில் சமாதானத்தை கொண்டு வருவதற்கான பணியில் எட்டுவருட காலமாக ஈடுபட்டு வருகிறேன். நோர்வே அரசும் ஏழுவருடகாலம் இந்த முயற்சியில் சம்பந்தப்பட்டிருக்கிறது.

**சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் மூன்று முக்கிய விடயங்கள்**

இந்த முயற்சியில் தொடர்ந்தும் சளைக்காமல் - சகிப்புத்தன்மையுடன் - இரண்டு தரப்புகளுடனும் ஒத்துழைக்க நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால், இந்த முயற்சி பெறுபேறுகள் எதுவுமின்றி இழுபடுவது இலங்கை மக்களையும் சர்வதேச சமூகத்தையும் சகிப்புத்தன்மையற்ற நிலைக்கு கொண்டு சென்றுவிடலாம். இதனைத் தரப்புகள் உணர்ந்துகொண்டு இந்தப் பேச்சுகளை வாய்ப்பாக்கிக் கொண்டு - இணக்கத்துடனும், விட்டுக்கொடுப்புடனும் விரைவாகவே ஒரு தீர்வைக் காண முயற்சிக்கவேண்டும் இது சம்பந்தப்பட்ட தரப்புகளின் பொறுப்பாகும்.

- இவ்வாறு எரிக் சொல்ஹெய்ம் தனது உரையில் குறிப்பிட்டார்.

தற்போது ஆரம்பமாகியிருக்கும் பேச்சின் பெறுபேறுகளாக மூன்று முக்கிய விடயங்களை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது என்றும் எரிக் சொல்ஹெய்ம் தனது உரையில் குறிப்பிட்டார்.

★ மக்களின் மனிதாபிமான நெருக்கடிகளை - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு - நீக்குவதற்கு - ஒரு வழிவகைகளை தரப்புகள் இரண்டும் இந்தப் பேச்சுகளின் ஊடாக எட்டவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரவும், கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் மறுவாழ்வு உதவிகளைப் பெறவும், அவர்களது வாழ்க்கை வழமைக்குத் திருப்பவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

★ நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதுடன் யுத்த நிறுத்த சூழ்நிலையைக் குலைக்கும் வகையிலான வன்செயல்களை - படுகொலைகளைப் புரிவோருக்கு தண்டனையிலிருந்து சட்ட விலக்கு அளிப்பது நிறுத்தப்படவேண்டும். அத்துடன், எல்லா வகையான இராணுவ வன்முறைகளையும், மோதல்களையும் தரப்புகள் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

★ பேச்சுகளின் ஊடாக ஓர் அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் பேச்சுகளின் பெறுபேறுகளாக சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது என்று எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார். (ஐ-உ)

## கோட்டடி கடற்பகுதியில் இளைஞனின் சடலம்கரைஒதுங்கியது



யாழ்.கொட்டடி கடற்பகுதியில் நேற்று மாலை இளைஞன் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச் சடலத்தில்இரு கிரனேட்டுக்கள், ஹோல்சர்கள், சயனைட் குப்பி ஆகியன இருந்தன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சடலத்தை நேற்று மாலை பொலிஸார் மீட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். (1)

# கௌரவமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அரசுடன் இணைந்துள்ளது.

முன்னைய ஜெனிவாப் பேச்சுகளுக்கும், ஒஸ்லோ பேச்சுகளுக்கும் விடுதலைப் புலிகள் வர மறுத்து அரசுடன் பேச்சு நடத்தவில்லை.

இந்த மாநாட்டை நாங்கள் ஒரு விவாத மேடை போன்றோ அல்லது சட்டவாதம் புரியும் நீதிமன்றம் போன்றோ பயன்படுத்த விரும்பவில்லை. பழைய சம்ப வங்களை அலசுவதற்கும் நாம் இதனை பயன்படுத்தப்போவதில்லை. இன்று கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முக் கியமான விடயங்களை ஆராய்ந்து இலங்கையில் ஓர் அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு தடையாகவுள்ள விடயங்களுக்கு தீர்வு காண முயற்சிப்போம்.

- தென்னிலங்கையின் ஒருமித்த கருத்தை உருவாக்க மகிந்த ராஜபக்ச தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார். அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு மற்றும் வல்லுநர்கள் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

- பெப்ரவரி ஜெனீவாப் பேச்சுகளுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் வன்முறைகளால் 897 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த காலகட்டத்தில் கொல்லப்பட்டுள்ள பொதுமக்களையும் உள்ளடக்கிய, 1,363 படுகொலைகளுக்கு புலிகள் பொறுப்பு.

- சிறிலங்கா சமாதான செயலகப் பிரதிப் பணிப்பாளரையும் அவர்கள் கொன்றுள்ளனர்.

- புலிகளின் படையணிகளில் சிறார்கள் தொடர்ந்து சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

- மாவிலாறு நீரை 60 ஆயிரம் மக்களுக்கு விடு தலைப் புலிகள் திறந்துவிட ஜூலையில் மறுத் தமைக்குப் பின்னர் வன்முறைகள் படிப்படியாக அதிகரித்தன.

- ஓகஸ்ட் மாதம் மூதூரிலிருந்து முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றினர். வடபகுதியிலிருந்து 1991ஆம் ஆண்டு முதல் முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் புலிகள் வெளியேற்றினர். அதன் பின்னர் மன்னாரிலிருந்து வெளியேற்றினர். தற்போது கிழக்கு வாழும் முஸ்லிம்களை பலியாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

- ஒக்ரோபர் 16 ஆம் திகதி ஹபரணையில் 100இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

- விடுதலைப் புலிகளின் வன் முறைகளால் ஆத்திரமடையும் சிங்களவர்கள் இயல்பிலே மோதலில் ஈடுபடும் நிலை உருவாக்கப்படுகிறது.

- கொப்பிட்டிகெல்லவவில் ஜூலை 15 ஆம் திகதி 64 பொதுமக்களை கிளைமோர் தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகள் கொன்றனர்.

- முஸ்லிம்களை வெளியேற்றும் நோக்கில் மூதூரில் ஊடுருவி புலிகள் தாக்குதல் நடத்தியதில் 53 ஆயிரம் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர்.

- கெப்பிட்டிக்கொல்லாவவில் நேற்றும் கிளைமோர் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிழக்கில் அக்கரைப்பற்றில் சிறிலங்காவின் சிறப்பு அதிரடிப் படை வாகனம் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது. வவுனியாவில் மன்னார் வீதியில் இன்று காலை கூட சிறிலங்கா பொலிஸ் நிலை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

- இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் பேச்சுக்களை தொடர மகிந்த ராஜபக்ச முடிவு செய்தார்.

**பேச்சுக்களில் கலந்துகொள்வது பலவீனத்தை வெளிப்படுத்துவது அல்ல**

- பேச்சுகளில் நாம் ஈடுபடுவதானது பலவீனத்தை வெளிப்படுத்துவது அல்ல. இலங்கையின் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களுக்கான அமைதியை உருவாகக் வேண்டும் என்ற எமது ஈடுபாட்டின் வெளிப்பாட்டிலேயே நாம் பேச்சுகளுக்கு செல்கின்றோம்.

- நாளாந்தம் நடைபெறும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொண்டு எமது நாட்டைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை மேற்கொள்கிறோம் - என்றார் நிமால்சிறிபால டிசில்வா.(ஐ-உ)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி





| | |
|---|---|
| தோற்றம் 15 - 07 - 1920 | மறைவு 08 - 09 - 2006 |
| தோற்றம் 31 - 01 - 1975 | மறைவு 14 - 09 - 2006 |

இரத்தினம் சிவக்கொழுந்து மயில்வாகனம் சற்குணரத்தினம்

எங்கள் குடும்பத்தின் விளக்குகள் அணைந்தாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலாது உங்கள் நினைவுகள்.

இன்று [29.10.2006] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.*
(54772)
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 21 - 09 - 1982 உதிர்வு 15 - 09 - 2006

### இரத்தினசிங்கம் பிரசாத்

**உடலை வீட்டு உன் உயிர்**
**பிரிந்தாலும் - நம் நெஞ்சை**
**வீட்டு அகன்றிடுமோ உன் எண்ணம்**
**நீ இறக்கவில்லை தம்பி - என்றும்**
**எங்களின் விழியில் நீ நாள் தோறும்**
**மலர்ந்து கொண்டே இருப்பாய்.**

33, அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(54761)

உன்னை என்றும் மறவாத:
அம்மா,அக்கா, அத்தான், மருமக்கள்.

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை கந்தசாமி பத்தர்

(நகைத் தொழிலதிபர் - தலையாழி)

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி பத்தர் நேற்று (28.10.2006) சனிக்கிழமை காலமானார்.அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் சுமனாவதியின் அன்புக் கணவரும் சாந்தினி, மகேஸ்வரன், ஜெயரட்ணம், சுனேந்திரா, நிமால், நந்தகுமார், ஜீவராணி, சுஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*18, சபாபதி வீதி (தலையாழி)*
*வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்



### சின்னம்மா முருகேசபிள்ளை

(கணக்கர்ஆச்சி)

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் 'திருத்தணிகை' ஆடியபாதம் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின் னம்மா முருகேசபிள்ளை தனது 101 ஆவது வயதில் நேற்று(28.10.2006)சனிக்கிழமை கால மானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசபிள்ளை யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தாமோ தரம்பிள்ளை (முன்னாள் Special Commissioner சாவகச்சேரி) மற்றும் நாகலிங்கம் (Srilankan Railways),காலஞ்சென்ற துரைச்சாமி (Former Special Commissioner Trincomalee) மற்றும் செல்வமணி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற காமாட்சி மற்றும் கமலாதேவி, குணமணி, மகாராணி, காலஞ்சென்ற பாலசுந்தரம் (R.S.M. Srilankan Army) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, பொன்னம்மா, மீனாட்சி, வள்ளிப்பிள்ளை மற்றும் நல்லதம்பி, காலஞ்சென்ற தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரமணி (ஜேர்மனி), பாக்கியநாதன் (ஜேர்மனி), லலிதா(ஜேர்மனி), அருளானந்தம் (ஜேர்மனி), அகல்யா (நோர்வே), குபேரன்(நோர்வே) , பரமலிங்கம் (I.P.W. கண்டி), இராஜலக்சுமி, ரஞ்சிதமலர் (திரு கோணமலை), யோகராஜா (திருகோணமலை), மனோரஞ்சிதம், (மீசாலை), பாண்டியன் (மீசாலை), நவரஞ்சிதம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுமேந்திரன், சுசீலா (சுவிஸ்), சிவ லோகநாதன்(சுவிஸ்), இந்திரா (ஜேர்மனி), வசீகரன்(ஜேர்மனி), டிலீப்குமார்(திருகோணமலை), புஸ்பா, தனுஷா, சுதர்சன் (கனடா), கௌசல்யா (கனடா), சுசரிதா (கனடா), சிவானந்தன்(கனடா), சுமதி (கனடா), தயா (கனடா), சுரேகா (கனடா), இந்திரஜித் (கனடா), மகேந் திரன் (I.P.W. அனுராதபுரம்), சிவமலர் (வவுனியா), மனோகரன் (மீசாலை), மல்லிகா தேவி, (மீசாலை), மாலதி(ஆங்கில போதனாசிரியர் யாழ். பல்கலைக் கழகம்), பகீரதன்(பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), மனமோகன்(கனடா), பத்மாவதி, மாதினி (கனடா), பிறேமச்சந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.10.2006) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
திருமதி செல்வமணிபாலசுந்தரம் (மகள்),நாகேந்திரன் (பேரன்).



### வயிரப்பிள்ளை சரவணமுத்து

ஏழாலை மேற்கு, தம்புவத்தையைப் பிறப்பிடமாகவும் அலுக்கை, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவருமாகிய சரவணமுத்து நேற்று (28.10.2006) சனிக்கிழமை காலமானார் .அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, அன்னப்பிள்ளை, சிவசம்பு, சின்னத்தம்பி, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும் ஐயாத்துரை, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கௌசலாதேவி, விமலாதேவி, ஸ்ரீகந்தவேல் (ஸ்ரீமுருகன் களஞ்சியம் - மல்லாகம்), ஸ்ரீரஞ்சன்(கனடா), ஸ்ரீமோகன் (கனடா), சாரதாதேவி(கனடா) ஆகி யோரின் அன்புத் தந்தையும் கணேசரத்தினம் (லண்டன்), சந்தனேஸ்வரன், சுமதிராணி, வதனி (கனடா), ஜெயரஞ்சிதமலர் (கனடா), திருச் செல்வநாதன் (கனடா) ஆகியோரின் மாமனும் வினோதா - செந்தில்நாதன் (கனடா), தர்சனா, கிந்துஷா, விபூசிதன், ஸ்ரீத்தா, ராஜி, நிலக்ஷன், சரணியா, அனித், ஆரபி, அனிசன், அபிநயா, அபிராம், திபிக்கா, யதுசன், மிதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2006)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*
(54768)

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுகளுக்கு வரையறை சர்வதேச சமூகம் விதிப்பு

கொழும்பு, ஒக் 29

இலங்கை இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக நோர்வே அரசின் அனுசரணையுடன் 2002ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் சமாதானப் பேச்சுகள் ஆக்கபூர்வமான பெறுபேறு எதனையும் எட்டாமல் நீண்டுகொண்டு செல்வதும், போர்நிறுத்த உடன்பாட்டை மதிக்காமல் இரு தரப்புகளும் தத்தமது பாட்டில் வன்முறை வழியில் நாட்டம் செலுத்துவதும் கண்டு ஏமாற்றமடைந்திருக்கும் சர்வதேச சமூகம், பேச்சுகளுக்கு வரையறை ஒன்றை விதிக்கும் கட்டத்துக்கு வந்திருக்கின்றது.

இணைத் தலைமைகள் உட்பட சர்வதேச சமூகம் இது விடயத்தில் முன்வைக்கவிருக்கும் வரையறை தொடர்பாக பிணக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளுக்கும் இம்முறை பேச்சு மேசையில் விளக்கப்படும் என்றும் தெரியவந்திருக்கின்றது.


★ 2002 முதல் 2003 வரை நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுகள் அதன் பின் கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற ஜெனிவா - 1 பேச்சுகள் என்பவற்றில் இணக்கம் கண்ட விடயங்களின் அடிப்படையிலேயே ஜெனிவா-2 பேச்சுகள் நடத்தப்படவேண்டும்-

★ போர்நிறுத்த உடன்படிக்கையை மேம்படுத்திப் பேணுவதுடன் எல்லாவகையான மோதல்களையும் முடிவுக்குக் கொண்டு வருதல்-

★ தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட நாட்டின் சகல தரப்பு மக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலான அரசியல் தீர்வு ஒன்றை 2003இல் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு அமைவாக உருவாக்குதல் -

இந்த முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுத்துள்ள சர்வதேச சமூகம் இந்த அடிப்படையில் பேச்சுகளை முன்னெடுத்து ஒரு தீர்வை எட்டுவதற்கான கால வரையறை ஒன்றை எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக அனுசரணைத் தரப்பான நோர்வேயிடம் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது - என்று ஜெனிவாவில் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பேச்சுக்குச் சர்வதேச சமூகம் விதிக்கும் வரையறை இரண்டு தரப்புகளுக்கும் இம்முறை அழுத்தம் தருவதாக இருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-உ)



அரசு - புலிகள் பேச்சு நடைபெற்ற ஜெனிவா சர்வதேச மாநாட்டுநிலையம் இது தான். அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் இடையே பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷ்ய அதிபர் மிக்கேல் கொர்ப்பச்சேவிற்கும் அமெரிக்காவின் அதிபர் றொனால்ட் றீகனுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை இந்த மண்டபத்திலேயே நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பேச்சுகளே சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைவதற்கும் வழிவகுத்தது.



# இராணுவத் தளபதி நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஒக்.29

இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று பலாலிக்கு வருகை தந்தார்.

இராணுவத்துக்கு எதிராக தாக்குதல் இடம்பெறும் பகுதிகளில் துருப்பினரை எவ்வாறு பணிக்கமர்த்துவது மற்றும் அவர்களது நடமாட்டம் குறித்து கலந்துரையாடும் வகையில் இராணுவத் தளபதியின் வார இறுதி யாழ்.விஜயம் அமைந்தது என்று இராணுவ இணையத்தளம் நேற்றிரவு தெரிவித்தது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் 51, 52, 53, 55 ஆகிய படைப்பிரிவுகளின் தளபதிகளுடன் இராணுவத் தளபதி விரிவான கலந்துரையாடல் களை நடத்தினார் என்றும் -

படைத்தளபதிகளுடனான சந்திப்பில் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியும் கலந்துகொண்டார் என்றும் அந்த இணையத்தள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் மழையால் பரவலாகப் பாதிப்புகள் 45 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக். 29

தற்போது பெய்துவரும் கடும்மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு 45 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என தேசிய இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வத்தளை, கெரவலப்பிட்டிய, நீர்கொழும்பு, கட்டான, ஜா எல, களனி மற்றும் அத்தனகலப் பகுதிகளில் பலத்த பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்துள்ள வீதிகள் பலவும் நீரில் மூழ்கியுள்ளன.

கட்டுநாயக்க - மினுவாங்கொடை வீதியில் றைக்கந்தப் பகுதியில் பெரும் வெள்ளம் தேங்கியுள்ளது. இதன் காரணமாக இந்த வீதியால் பஸ்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இந்த வீதியால் செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை -

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும்பொருட்டு, மாவட்ட செயலாளர்களுக்கு 7 மில்லியன் ரூபா ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

தலைநகர் கொழும்பின் பல பிரதான வீதிகள் மற்றும் உப வீதிகளிலும் ஆங்காங்கே வெள்ளம் தேங்கியுள்ளது. கால்வாய்கள் நிரம்பிவிட்டதால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தாழ்ந்த பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. (ஐ-12)

## ஆணைக்குழுவில் விவரம்பதிவு

யாழ். செம்மணிப் பகுதியில் வைத்து கடந்த 25ஆம் திகதி காணாமற்போனதாகக் கருதப்பட்ட என். வி.டி.ஏ.ஜி. என்ற தொண்டு நிறுவனத்தின் பணியாளர் தியாகராஜா சஜிந்தன் (வயது - 28) நேற்றுமனித உரிமைஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குச் சென்று தமது விவரங்களைத் தெரிவித்தார்.

## கிரனேட் வெடித்ததனால் சாரையடியில் பதற்றம்

பருத்தித்துறை சாரையடி முகாம் பகுதியில் நேற்றுக்காலை கிரனேட் வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. இதனையடுத்து, சாரையடி பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டனர்.

சாரையடி முகாமில் இருந்த சிப்பாய் ஒருவர் வைத்திருந்த கிரனேட்டே தவறுதலாக வெடித்தது என்பது தெரியவந்ததும் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (115)



ஜெனிவாவில் நேற்று சமாதானப் பேச்சு ஆரம்பமாகியபோது அரச பேச்சுக் குழுவின் தலைவர் நிமால் சிறிபாலடி சில்வாவும், விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவின் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனும் ஊடகவியலாளர்கள் முன்பாக கைகுலுக்கிக்கொண்ட காட்சி....

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 30, 40 வருடங்களாக தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை முன்வைத்துப் போராடுகிறார்கள். அவர்கள் ஏற்கக்கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும். என்று புலிகளின் குழுவினர் கோரினர்.

இப்போதுதான் எதிர்க்கட்சியான ஐதே.கட்சியுடன் இணக்கத்துக்கு வந்துள்ளோம். சகலரும் இப்போது தீர்வு தொடர்பாக ஆராய்கிறார்கள்.

90 சதவீதமானவர்கள் இந்தத் தீர்வுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

இந்த தீர்வை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அடுத்த கட்டப் பேச்சின் போது அந்தத் தீர்வை முன்வைக்கிறோம் - என்ற அரசுத் தரப்புப் பதில் அளித்ததாக அறிய வந்தது. (அ-உ-1)

## ஏ-9 பாதையைத் திறக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ-9 பாதையை மூடிவைத்திருப்பது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். அந்தப் பாதை மூடப்பட்டதால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் மனிதப் பேரவலம் உண்டாகி உள்ளது. இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை.-

ஏ-9 பாதையை திறப்பதற்கு இன்றைய (29 ஆம் திகதிய) பேச்சுக்களில் அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றால் அடுத்தசுற்றுப் பேச்சுக்கானதிகதியை நிர்ணயிக்கச் சம்மதிக்கப் போவதில்லை - என்று புலிகள் தரப்பில் நேற்றைய பேச்சுக்களில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அரசாங்கத் தரப்பில் கருத்துத் தெரிவித்த வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே ஏ-9 வீதியைத் திறப்பது என்ற கேள்விக்கே இடமில்லை எனத் தெரிவித்தார்.

குடாநாட்டுமக்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் கப்பல் மூலம் அனுப்பி வைக்க அரசாங்கம் தயாராக உள்ளது. விடுதலைப் புலிகள் அதற்கு ஒத்துழைப்புத் தந்தால் இது ஒரு விவகாரமாக இருக்காது. ஏ-9 பாதையைத் திறக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று கூறினார்.

அதனை தொடர்ந்தே விடுதலைப் புலிகள் தரப்பு பேச்சுக் குழுவின் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்றைய பேச்சுக்களின்போது அரசதரப்பு உடன்பாடு தெரிவிக்கவில்லையானால் அடுத்த கட்டப் பேச்சுக்கு திகதி எதனையும் நிர்ணயிக்க தமது தரப்பு இணங்கமாட்டாது என்று கூறியதாக 'உதயன்'-'சுடரொளி' பத்திரிகைகளின் [illegible] யாக அறியவந்தது. (அ-உ)

## ஆக்கபூர்வ முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்களில் முதல் நாள் பேச்சுக்களின் முடிவில் பேச்சுத்தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:- தமிழ்மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று நாம் கோரினோம்.

ஜெனிவாவில் ஏற்கனவே காணப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டோம். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முழுமையான பணிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனத் தெரிவித்தோம்.

யுத்தநிறுத்தஉடன்படிக்கையை நூறு வீதம் நடைமுறைப்படுத்தத் தயாராக இருக்கின்றோம் - என்றும் தெரிவித்தோம். மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத்தீர்வுகாண அரசு முன்வரவேண்டும் என்று கோரினோம். ஆனால், அரசுத் தரப்பில் இருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும்எமக்குக் கிடைக்க வில்லை. மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்பதேஎமது முக்கிய கோரிக்கையாக இருந்தது - என்றார் தமிழ்ச்செல்வன். (அ-உ-1)

**பரீட்சை விளாத்தான்**

தரம் 5 புலமைப்பரிசில் 2006 திரு.கணேசலிங்கம் அவர்களின் விசேட வெற்றித் தேர்வு 2 வெளிவந்து விட்டது.
கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம்- யாழ்.நகர்.
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.
மொடேன் புத்தகசாலை - நெல்லியடி.
அருள் புத்தகசாலை - சாவகச்சேரி.

**விசேட வெற்றித் தேர்வு-3 இரண்டு நாளில் கிடைக்கும்**

நல்லூர், அரியாலை சுபஸ் அச்சுப் பதிப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன. 3ஆம் தவணை பரீட்சை விளாத்தான் தேவையானோர் தொடர்பு கொள்ளவும் 222 9016

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org